நவம்பர் 2022

# அடைக்கலத்தூது

அடைக்கல அன்னை சபையின் வெளியீடு







முதல் அர்ப்பண விழா - 2022



நிரந்தர அர்ப்பண விழா - 2022

# என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!





**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்!**

இந்த ஆண்டின் புதிய அடைக்கலத்தூது நமது பொதுப்பேரவை அமர்வுகள் பற்றிய தகவல்களைத் தாங்கி வருகிறது.

பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைந்து வழிநடக்க என்ற நம் 22 -வது பொதுப்பேரவையின் மையக்கருத்து அதனைப் புரிந்துகொள்ள நாம் மேற்கொண்ட கருத்துப்பரிமாற்றப் பேரவைகள் அனைத்தையும் தொகுத்து இந்த அடைக்கலத்தூது நம் கண்முன் விரிக்கிறது. இந்தப் பிரபஞ்சப் புரிதல் நம்மை பிரபஞ்ச மனிதர்களாக அடையாளம் காட்டுகிறது. உலகம், உயிர்கள், இயற்கை படைப்புகள், பஞ்சபூதங்கள் இப்படி உலகில் உள்ள அனைத்துமே பிரபஞ்சப் பயணம் மேற்கொள்கிறது. பிரபஞ்சம் என்ற இழையினால் பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளது. இந்த உண்மையை உணர்ந்துகொள்ள நாம் மேற்கொண்ட முயற்சிகள் நம்மை மேம்பட்ட மனிதர்களாக உருமாற்றியிருக்கிறது என்பது என் ஆணித்தரமான நம்பிக்கை. இந்தப் பிரபஞ்சம் அதன் சிறிய உயிர்களாகிய நம்மீது கரிசனையும், அன்பும் கொண்டிருக்கிறது என்ற உண்மையை நான் உணர இக்காலம் எனக்கு உறுதுணைபுரிந்தது. அதற்காக உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி கூர்கிறேன்.

பிரபஞ்சப் பேரன்புதான் நம்மை ஒன்றாக இணைக்கிறது. நீங்களும் நானும் ஒன்றே என்ற உண்மையை உணர வைக்கிறது. நம்மில் காணப்படும் வேறுபாடுகள் அனைத்தும் தோற்ற மாயைகள், காட்சிப் பிழைகள் என்ற உண்மையை உணர வைக்கிறது.

அன்பில் வாழ்வது மட்டுமே நம் இயல்பு
பேரன்பில் மகிழ்ந்திருப்பது மட்டுமே வாழ்வின் நோக்கம்.
துன்பங்கள் தொல்லைகள் எல்லாம் நம் மனத்தின் உருவங்களே!
பகைமை, வெறுப்பு எல்லாம் ரூபிகரங்களே!
நிஜமானது பேரன்பே! உண்மையானது ஒன்றாயிருப்பதே!

இதை மிக உன்னதமாக உணர்ந்த கணியன் பூங்குன்றனார் கூறுகிறார்

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா!**

என்ன அற்புதமான உணர்தல் எத்தகைய ஆத்மார்த்தமான புரிதல். இந்தப் பிரபஞ்சப் பேரன்புக்குள் வழிநடக்க இறைவா! எனக்கு வரம் தா. இணைந்து வழிநடக்க உங்கள் கரம் வேண்டும் எனக்கு.

அக ஒளிப்பயணத்தில் தோழமையுடன்

**சபைத் தலைமை அன்னை**

# CERTIFICATE DISTRIBUTION CEREMONY & WORLD ENVIRONMENT DAY

**"By the Lord has this been done, it is wonderful in our eyes. This is the day the Lord has made let us rejoice in it and be glad."**

Yes, the Almighty God has been done marvelous deeds for Mata Sahayika Vocational Training Centre, Canary hill, Hazaribag, Jharkhand. I am Sr. Kulandai Theresa very grateful to God for his unconditional love and providence. And also I express my deepest gratitude to our Mother General and Team for their continuous encouragement and support. On 6th June 2022 our Computer, Tailoring and Beautician course students received their certificates with best award. We distributed Five Sewing machines to poor and Widows and Five computer boys were placed in "INDO mim PVT Ltd company Bangalore" for job and higher studies. We Mata Sahayika sisters celebrated world environment day to create awareness among the young minds. World environment day reminds us to strengthen the world and ensure that nature is preserved at all costs. It throws light on the causes which are causing serious harm to our environment. When we plants trees, we plant the seed of peace and hope. This day we spread awareness among the students as well as people through street play and skits on environment protection. It encourages the students, public from different societies and communities to take active participation in celebrating the day. We motivate the people to keep their nearby surroundings safe and clean so that everyone can have a cleaner, greener and more prosperous future.

So here we are today to hold hands in making every little difference we can, together. Let us stand together and make this world a wonderful place not just for us but for the future generations as well. To Only One Earth and Giving more Time for Nature.

**"SAVE EARTH, SAVE GREEN"**









**MATA SAHAYIKA VOCATIONAL TRAINING CENTRE,
HAZARIBAGH.**

# THE LORD HAS DONE THIS AND IT IS MARVELLOUS IN OUR EYES.

**(PSALM 118:23)**

*Gratitude is the inward feeling of kindness received.*
*Thankfulness is the natural impulse to express that feeling.*
*Thanks giving is the following of that impulse.*

**Milk Fermentation Ceremony:**

On 06.07.2022 our Provincial Rev. Sr. Jesintha Mary and her team Sisters from Madha Kovil Street Pattukkottai, and Sisters from Sanjay Nagar arrived at the new convent at 6.00 a.m with the multiseriate. When we got the multiseriate, we were delighted. Our parish priest Rev. Fr. Antony Samy, and our Asst. Parish Priest Rev. Fr. Sandhana Raj blessed us with prayers as we entered with the sisters.

All of the sisters participated in the ritual of the milk fermenting at 6.30 a.m. The breakfast was served to all guests at the house. We thank God for his favours on this day in order to demonstrate our gratitude.





**House Blessing Ceremony:**

"The Lord Declares to you, that the Lord himself will establish a house for you. (2 Samuel 7:11)

06.07.2022 This day was notable in our Bon Secours Family's history, because we started to build a new home at Pannavayal Road, Pattukkottai with dreams and

efforts initiated and laid foundation stone by our former Provincial Rev. Sr. Annal Rita Rani and her team. The dream of a new convent had become true. The entire Bon Secours family, including Rev. Fathers, Rev. Sisters, teachers, pupils, parents, and invited guests, gathered in the new convent.

The master of ceremonies introduced the event by outlining the background of Bon Secours convent. As soon as our Mother General Rev. Dr. Maria Philomi and the General Councillors arrived. They were greeted with flowers and badges. A bouquet was presented to our most cherished Bishop of Thanjavur, Rev. Dr. Devadoss Ambrose at 5.00 pm. The tiny angels of Bon Secours Public School Pattukkottai invited all our distinguished guests inside the new convent along with the classical dancers.

Sisters greeted our Bishop and Mother General team with warm welcome and Mangala Aarathi. The foundation stone was opened by our Mother General Rev. Dr. Mother Maria Philomi. After our Mother General cut the ribbon our Bishop blessed the new convent with prayers. We went for refreshment before the Eucharistic celebration began at 6.30 p.m. with lighting of the lamp and Introduction by Sister Deepa Jeneth (1421).



During the homily, the Bishop named to our house as St. Maria Gorreti's house, since the celebration on Saint Maria Goretti's feastday. Following the Eucharistic celebration installation of Blessed Sacrament done by our Bishop. Rev. Sr. Emelda was honouring Bishop, Mother General and her team, Fathers, Sisters and Guests with thanksgiving and words of Gratitude. All the Fathers and Sisters who came to the function received gifts. A scrumptious dinner was prepared for all. According to the Lord's words, today was a blessed day in our life, and we give thanks to our Almighty with all honour and glory.

**Sr. Superior & Community**
**Bon Secours Convent**
**Pannavoyal Road, Pattukkottai.**

## மறந்தே போனேன்!

கவிதை எழுத ஆசைப்பட்டேன்.
அதற்காக சுற்றும் பூமியைச் சுற்றிப் பார்க்கச் சென்றேன்.
தலை சுற்றி நின்றேன்.
ஞாயிறு திங்களைச் சந்திக்கச் சென்றேன்
கால் சோர்ந்து நின்றேன்.
இயற்கையின் அழகை வர்ணிக்கச் சென்றேன்
அதன் அழகை ரசித்ததில்
கவிதை எழுதவே மறந்துவிட்டேன்.

சகோ. ரீத்தா (1346).

# “அர்ப்பணம் பணிக்காகவே!”

நாள்: 09.07.2022 கருத்தாளர்: ஆயர் சிங்கராயர் சேலம் மாவட்டம்

குளிர்ந்த வயல்கள் நிறைந்த பகுதி தஞ்சை
தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சை
தமிழ் முதல் பல்கலைக்கழகம் அமைந்தது தஞ்சை

சேவை பணிக்கான திட்டக்குழு **ஆயர் சிங்கராயர்** தலைமையில் காலை 10.30 மணிக்கு இனிதே ஆரம்பமானது. அர்ப்பணம் பணிக்காகவே என்ற தலைப்பில் நாம் செய்யும் சேவையை அர்ப்பணத்தின் மேன்மை என்று உரை நிகழ்த்தத் துவங்கினார். திருத்தந்தை பிரான்சிஸ் (Fratelli Tutti) என்ற சுற்றுமடலில் **‘அர்ப்பணம் பணிக்காகவே’** என்று கூறியது பெருமை. நாம் புனிதனாக வேண்டுமென்றால் துறவியாக வாழ்வதில் இல்லை. பணி செய்வதிலேயே இருக்கிறது. Consecration Is For Mission என்பது நோக்கம் கடவுள் பணியே நமது பணி Mission Dei

**Mission of God.**

| | | |
|---|---|---|
| Misio Christ | - | Mission of Christ கிறிஸ்துவின் பணி |
| Missio Ecclesiae | - | திரு அவையின் பணி |
| Missio Clerici | - | திரு நிலையினரின் பணி |
| Missio Consacrati | - | துறவியரின் பணி |
| Missio Laici | - | பொதுநிலையினரின் பணி |





## ONE MISSION IS BY ALL:

பல நபர்கள் சேர்ந்து ஒரே பணியைச் செய்தல்

கடவுள் பணி என்ன? தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அனிக்கும் அளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். (யோவா 3:16)

| | | |
|---|---|---|
| தூண்டு சக்தி | - | கடவுளின் அன்பு |
| அவரது செயல்பாடு | - | தம் மகனை அனுப்புதல் |
| நோக்கம் | - | அவர்கள் வாழ்வு பெற |
| இலக்கை அடையும் வழி | - | தம் மகனில் நம்பிக்கை கொண்டு |
| தனி கவனம் | - | ஒருவர் கூட அழிந்து போகாமல் |





பணி என்பது கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு ஒரே வாழ்வு பெற அழைத்தல். வாழ்வு என்பது பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்டது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட நிலை உயிரோட்டம் உள்ளதாக இருப்பதை குறிப்பதே வாழ்வு. இத்தகைய வாழ்வு பெற என்ன வழி? ஆடுகள் வாழ்வை பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். (யோவா10: 10).

**வாழ்வு எல்லாவற்றையும் உள்ளடக்கியது:**

**இயேசு** - நானே வழியும் வாழ்வும் கிறிஸ்துவின் பணி என்னில் நடக்க நான் என்ன செய்ய வேண்டும்? "நம்பிக்கைக்குள் அனைவரையும் அழைப்பது". அப்போதுதான் நிறைவாழ்வு கிடைக்கும். இதுதான் ஒரு துறவியின் பணி. இந்தப் பணியை செய்ய நான் என்ன செய்ய வேண்டும்? "**கிறிஸ்துவை அனுபவித்த ஒரு இதயம் இன்னொரு இதயத்திற்கு கிறிஸ்துவை வழங்குதல்**" ஒரு மனிதனை மனிதனாக வாழ வைக்க ஒரு மனிதன் போதும். ஆனால் ஒரு மனிதனை முழு மனிதனாக வாழ வைக்க ஒரு துறவி வேண்டும். அன்னை தெரசாவைப்போல் தான் அனுபவித்த கிறிஸ்துவை மனிதர்களிடத்தில் வழங்க வேண்டும்.



**கிறிஸ்துவுக்காகவே செய்கிறேன்...**

**Gospel**

**Bible**

**Christ**

**Jesus**

● உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி. (1பேது 2: 9).

● நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்தனை அழகாய் இருக்கின்றன. (உரோ 10: 15).

● இவ்வாறே உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்போது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள். (மத் 5: 16)

● அந்த ஒளி நற்செய்தி நற்செயல்களாக மிளிர வேண்டும். இதுவே Mission.

**Mission is = செயல்பாடு**

இயேசு எப்படி பணி செய்தார்? ஆடுகள் வாழ்வை பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். (யோவா10: 10). இயேசுவின் வாழ்வில் ஒரு நாள்... மாற்கு 1: 21 - 38



1. செபக் கூடம் - 21:29
2. இறைவார்த்தையோடு உறவு
3. தீமைக்கு எதிராகப் போராடி வெற்றி பெறுதல்
4. வீடு சந்திப்பு 21:29
5. நகர வாயில் 21: 32-34
6. தனி செபம்

❖ திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் Ecclesia in Asia என்ற சுற்றுமடலில் இந்தியாவில் பணி எவ்வாறு இருந்தது. என்பதனை இவ்வாறு குறிபிட்டுள்ளார்.


❖ ஏழைகளோடு உரையாடல்

❖ பண்பாடுகளோடு உரையாடல்

❖ மதங்களோடு உரையாடல்

❖ Minisitry என்பது Public Activity from the spirit of christians on behalf of christian community





## SIX CHARACTERISTICS OF CHRISTIAN MINISTRY:

1. It is doing Something Action - செயல்பாடுகள்
2. Public Action - வெளிப்படையான
3. For the kingdom of God - இறையாட்சிக்காக
4. On behalf of Christian - கிறிஸ்துவ சமூகத்தின் பெயரால்
5. With the charisms of the holy spirit - ஆவியானவரின் கொடைகள்
6. Diverse Services - வெவ்வேறான பணிகள்





**இயேசுவின் பணி எப்படி இருந்தது?**

1. இறையாட்சியின் பணியாளர்
2. இயேசுவில் இறையாட்சி மலர்ந்தது
3. இது தொடர் நிகழ்வு
4. திரு அவை இறையாட்சியின் பணியாளர்
5. நாம் ஒவ்வொருவரும்

தொடக்கக் கால திரு அவையில் அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது.

1. இறைவார்த்தை - பிறருக்கு அறிவித்தல்
2. நட்புறவு - குடும்பம் சமூகம்
3. அப்பம் பகிர்தல் - மனித வள மேம்பாடு
4. இறைவேண்டல் - ஆன்மீக செயல்பாடு

**புதுவிதமான பணிகள்:**

✓ Drug Addicts
✓ Guidance for proper use of social media
✓ Sex Education and marriage Preparation
✓ Home based care of elderly and lonely

✓ Care of the sexually abused and falsely accused for the some
✓ Working for peace and harmony among families and villages
✓ Care of those having suicidal tendencies
✓ Non formal education of children and youth
✓ Crisis management committees
✓ Skill training and guidance for self-employment

Commission எதற்கு?

பொறுப்பெடுத்து கொண்டவர்கள்

ஒரு செயல் நன்றாக நடக்க ஆலோசிப்பவர்கள்:

- அறிந்திருத்தல்
- அறிவுறுத்துதல்
- வழிகாட்டுதல்
- திட்டமிடுதல்
- செயல்பட உதவுதல்
- ஊக்கப்படுத்துதல்
- மதிப்பீடு செய்தல்





செய்தல் என்பது கூடாது. செய்வதற்கு ஆயத்தம் செய்தல் என்பதே வழிகாட்டுதல் சிறப்பானது.

**திட்டக் குழுவில் இருப்போரின் மனநிலை...**

- ANIMATOR - உயிரோட்டம் கொடுப்பவர்
- ENABLER - முடியாததை செய்து முடிப்பவர்
- COORDINATOR - ஒருங்கிணைப்பாளர்
- ENCOURAGER - ஊக்குவிப்பவர்

## PROCEDURE TO PLAN FOR MINISTRIES

1. சூழ்நிலையை ஆராய்தல்
2. புரிந்து சரியாக ஆய்வுக்கு உட்படுத்துதல்
3. கலந்துரையாடல்
4. என்ன செய்ய முடியும்?
5. யார், எங்கே, எப்படி?
6. மதிப்பீடு செய்தல்

சுமார் 4.30 மணி அளவில் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

# பேரவைக் கொள்கை வாழ்வாக்கக் குழுவிற்கான தயாரிப்புக் கூட்டம்

புதுமைகளாலும், புதிர்களாலும், புனைவுகளாலும் விந்தை மனிதனுக்கு விருந்தளிக்கும் ஒரு யுக விருட்சமே இந்த பிரபஞ்சம். இந்தப் பிரபஞ்ச சக்தியைப் புரிந்து அனுபவிக்கும் வகையில் 13.07.2022 அன்று காலை சரியாக 9 மணிக்கு பேரவைக் கொள்கை வாழ்வாக்கக்குழு சகோதரிகளுக்குத் தயாரிப்புக்கூட்டம் தஞ்சை மாநில இல்லத்தில் நடைபெற்றது. சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி (706) மற்றும் பேரவைக் கொள்கை வாழ்வாக்கக்குழு சகோதரிகள் அனைவரும் பிரபஞ்சப் பேரன்பில் ஒன்றிணைய இறைத்துணை வேண்டியவர்களாய் எல்லாவற்றிற்கும் மேலாக விளங்கும் உன்னத ஒளியான இறைஒளியைப் பெற திருப்பலியில் பங்கேற்று பிரபஞ்சத்தோடு வழிநடந்தார்கள்.





அதன்பின், சரியாக 10 மணிக்கு சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி (706) அவர்கள் பேரவைக் கொள்கை வாழ்வாக்கக்குழு சகோதரிகளிடம் தன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அதன்படி, 12 - 14 வாழ்வியலுக்கான வழிமுறைகளைக் குழுமங்களில் எப்படி வாழ்வாக்கப் போகிறோம்? குழுக்களில் எவ்வாறு கருத்துப் பரிமாற்றம் செய்யப் போகிறோம்? என்பதைப் பற்றி கலந்துரையாடினார்கள். மொத்தம் 10 குழுக்கள். அவற்றில் 7 குழுக்களுக்கு மட்டும் பேரவைக் கொள்கை வாழ்வாக்கக்குழு வழிநடத்துவார்கள். மற்ற 3 குழுக்களுக்கும மைய நிர்வாகக் குழுவினரால் வழிநடத்தப்படும் என்று சபைத்தலைமை அன்னை கூறினார்கள். சகோதரிகளுக்கான கருத்துப்பரிமாற்றப் பேரவைக் கூட்டம் 3 நாட்கள் நடைபெறும். அவற்றில் 1½ நாட்கள் பேரவைக் கொள்கை விளக்கக்குழுச் சகோதரிகள், சகோதரிகளை வழிநடத்துவார்கள் என்றும் ½ நாள் pilgrimage செல்வார்கள் என்றும் மீதமுள்ள ஒரு நாளை பேரவைக் கொள்கை வாழ்வாக்கக்குழு வழிநடத்துவார்கள் என்றும் கூறினார்கள்.

கருத்துப் பரிமாற்றப் பேரவைக் கூட்டத்தின் 3-ஆம் நாளை பேரவைக் கொள்கை வாழ்வாக்கக்குழு எவ்வாறு வழிநடத்தப்போகிறார்கள் என்பதைப் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. இதற்கான கால அட்டவணை வரையறுக்கப்பட்டது. அதன் விபரம் காலை 8.30 மணி முதல் 1.00 மணி வரையிலும் மதியம் 2.00 மணி முதல் 4.00 மணி வரையிலும் கருத்துப் பரிமாற்றம் நடைபெறும். மாலை 4 மணிக்கு Action Plan அதாவது சகோதரிகள் மனதில் நன்கு பதியுமாறு ½ மணி நேர Programme வழிநடத்தப்பட வேண்டும். விவிலியப் பரிமாற்றங்களை இந்த கொள்கை வரைவோடு இணைத்துள்ளோம். மேலும் 13-ஆம் Chapter -இல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அனைத்தும் ஒன்றாக இணைந்து இருப்பதால் அவற்றை தனிவாழ்வு, குழுமவாழ்வு, பணிவாழ்வு, சபை, திருஅவை என பிரிக்கப்பட்டு உள்ளது. இவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு புத்தமாக உங்கள் கைகளில் தரப்படும் என்று கூறினார்கள்.



நாம் வாழ்வது மிக மிக எளிது. ஆனால் மற்றவர்ளை வாழ்வாக்கச் செய்வது மிக மிகக் கடினம். எனவே உங்கள் சகோதரிகளுக்கு நீங்களே விளக்கிக் கூறுங்கள் என்பதின் பேரில் ஒவ்வொரு குழுவும் தனித்தனியாகப் பிரிந்து அவரவர் சகோதரிகளுக்கு எப்படி விளக்கிக் கூற வேண்டும்? எவ்வாறு எளிமையாகச் சொல்ல வேண்டும்? என்று குழுவில் கலந்துரையாடினார்கள். அதன்பின் ஒவ்வொரு குழுவும் தங்கள் கருத்துக்களைச் சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி (706) அவர்களிடம் பகிர்ந்து கொண்டார்கள். அனைத்துக் குழுக்களும் கலந்துரையாடிய பின்பு சகோதரிகளை வாழ்வாக்கும் முயற்சியில் ஈடுபட ஆயத்தம் செய்ய பிரபஞ்சம் அனைவரையும் வாழ வைக்கும் என்ற நம்பிக்கையில் அனைவரும் புறப்பட்டுச் சென்றனர்.



# துறவற வாழ்வில் 15, 16, 17 ஆண்டுகள்!

நிலமெல்லாம் மரம் செடி கொடிகளின் அழகு. கானம் குயிலோசை செவியில் தீண்டியத் தருணம் காவிரி நீர் உயிராய் கலந்த தஞ்சை தரணியில் பான்செக்கர்ஸ் கல்வியியல் கல்லூரியில் துறவற வாழ்வில் 15, 16, 17 ஆண்டுகள் வாழ்ந்து கொண்டிருக்கும் சகோதரிகளுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. துறவற வாழ்வில் காலடி எடுத்த தருணம் சற்று நினைவில் வந்து போக, 15 ஆண்டுகள் கடந்து விட்ட பிரமிப்பு, 15 ஆண்டுகள் சில நாட்களைப் போல கடந்து சென்றுவிட்டது.

அருட்பணி. அல்போன்ஸ் (sdb) அவர்களின் வகுப்பு ஆசியுரையாக அமைந்தது. எதற்காகத் துறவு வாழ்வுக்கு அழைக்கப்பட்டோம்? இறைவாக்கினராக வாழ அழைக்கப்பட்ட நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? வார்த்தைகள் வாழ்வை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. நேர்மறையான வார்த்தைகளால் நேர்மறையான உணர்வுகள் உருவாகின்றன. சவால்கள் நிறைந்த பணியினை, சாதனைப் படைக்க உதவும் சிறந்த பணியினை எவ்வாறு புரிந்துகொண்டோம், எப்படி பணி செய்தோம்? மனிதர்களை மாற்றத்திற்கு அழைக்கும் இறைவார்த்தை நம் வாழ்க்கையில் ஊடுருவிச் சென்றதா? மாற்றத்தை உண்டாக்கியதா? அல்லது தாக்கத்தை உருவாக்கியதா? சாட்சிய வாழ்வு வாழ்வது என்பது உள்ளத்தால் தூய்மையாக வாழ்வது. பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமைப் போல, புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவானைப் போல, புனித பவுலைப் போல இறைவன் மீது நம்பிக்கை வைப்பது, இறை பராமரிப்பை உணர்வது.






**To find God in all things and all things in God**

என்று இறைவனைக் காண்பது. உலகம் நல்லது, நேசிக்கப்பட வேண்டியது. கிறிஸ்து - கடவுளின் முழுமையான அன்பின் வெளிப்பாடு. உலகின் மிகச்சிறந்த சொல் “செயல்” நாம் அனைவரும் செயல் வீரர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். கொடுத்த வார்த்தைப்பாட்டிற்கேற்ப வாழ்கிறோமா? பணிவாழ்வில் அவ்வப்போது ஏற்படும் ஆன்மீக வறட்சியை சரிசெய்து புதுத் தெளிவு பெற்றவர்களாக, புனித அவிலா தெரசாவைப் போன்றும் அன்னைத் தெரசாவைப் போன்றும் பணி செய்ய முற்படுவோம். இறைவன் தன்னை நோக்கி வருபவர்களை 7 விதமான ஆசீர்வாதங்களால் நிரப்புகிறார்.

- ❖ **I will be with you**
- ❖ **I will protect you**
- ❖ **I will strengthen you**
- ❖ **I will bless you**
- ❖ **I will give you peace**
- ❖ **I will provide for you**
- ❖ **I will love you always**

என்று நாம் பிறருக்கு ஆசீர்வாதமாய் இருக்க ஆசீர்வதிக்கிறார், என்று அருட்தந்தை பகிர்ந்து கொண்டார்.

மற்றவரை அறிந்தவன் புத்திசாலி
தன்னை அறிந்தவன் ஞானி -லா வோட்சே.

என்பதிற்கிணங்க சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி (706) சகோதரிகளுக்கு சுய ஆய்வுக்கான வினாத் தொகுப்புக் கொடுத்து சுய ஆய்வுக்கு இட்டுச் சென்றார். இந்த வினாத் தொகுப்பு ஒவ்வொரு வருடமாகத் திரும்பிப்பார்க்க வைத்தது. துறவறத்தில் சரியான திசையில் பயணிக்க ஊக்கமூட்டியது. ஆன்மீக வாழ்வையும், பணி




வாழ்வையும் எவ்வாறு இணைத்து பயணிப்பது என்ற தெளிவை உண்டாக்கியது. மெதுவாகச் சென்றாலும், வேகமாக சென்றாலும் signal-இல் நின்றுதான் ஆக வேண்டும். **“நில், கவனி, செல்”** என்பதைப் போன்று,


துறவற வாழ்வுக்கு எதற்காக அழைக்கப்பட்டோம்? என்று “நின்று” பார்த்தோம்.

எதை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்று கவனித்து பார்த்தோம்.

இனி எப்படி வாழ வேண்டும் (செல்) என்று முடிவெடுத்து துறவறப் பயணத்தை தொடர்ந்தோம்.

சகோ. தஸ்நேவிஸ் மேரி,<br>
மயிலை இல்லம்.

# ஓ! பிரபஞ்சமே!



உன் அழகை ரசிக்கிறேன்!<br>
உன் ஆற்றலை சுவாசிக்கிறேன்!<br>
உன் பொறுமையை நேசிக்கிறேன்!<br>
உன் தன்னடக்கத்தை விரும்புகிறேன்!<br>
உன் பேரன்பை உணர்கிறேன்!<br>
உன் சுறுசுறுப்பை பாராட்டுகிறேன்!<br>
உன் ஒழுக்கத்தை பின்பற்றுகிறேன்!<br>
எல்லா திறமையையும் தன்னகத்தே கொண்ட பிரபஞ்சமே நீ வாழ்க.

சகோ. குளோரி ராணி (1212).

# இல்லத் தலைமைச் சகோதரிகள் கூட்டம்

"ஆண்டவரின் இல்லப்பணி அனைத்தும் நிறைவு பெறும்வரை
அவர் உன்னை விட்டு விலகார். உன்னைக் கைவிடார்"
(குறிப்பேடு 28:20) முதல் நாள் - 20.09.2022

20.09.2022 அன்று காலை 8.30 மணியளவில் இல்லத் தலைமைச் சகோதரிகளுக்கான கருத்தரங்கு திண்டுக்கல் மாநில இல்லத்தில் பெயர் பதிவுகளுடன் ஆரம்பமானது. தொடர்ந்து 9.00 மணியளவில் இல்லத்தலைமைச் சகோதரிகள் அனைவரும் சிற்றாலயத்தில் ஒன்றுகூட அருட்பணியாளர் குழந்தை (Cap) அவர்களின் தலைமையில் சிறப்பான மறையுரையுடன் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

காலை 10 மணியளவில் இல்லத்தலைமைச் சகோதரிகள் அனைவரும் கருத்தரங்கு அறையில் ஒன்றுகூடத் திண்டுக்கல் மாநிலத் துணைத் தலைமைச் சகோதரி கஸ்பார் ஆரோக்கிய மேரி (957) அவர்களின் தொடக்கச் செபத்துடன் சகோதரி ஆரோக்கிய செல்வி (1073) அவர்கள் பஜன் பாட, சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி (706) அவர்கள் குத்துவிளக்கேற்றி ஒளியின் நாயகனாம் கிறிஸ்துவை பிரசன்னப்படுத்தினார்கள். தொடர்ந்து திண்டுக்கல் மாநிலத் தலைமைச் சகோதரி பவுலின் பாத்திமா அவர்கள் பல்வேறு நேர்மறை பண்புக்குச் சொந்தக்காரரான சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி அவர்களையும், சமூக ஆர்வலரான அருட்பணியாளர் குழந்தை அவர்களையும், மூன்று மாநிலத் தலைமைச் சகோதரிகள், மைய மாநில ஆலோசகச் சகோதரிகள், வடமாநில வட்டாரத் தலைவி மற்றும் அனைத்து இல்லத்தலைமைச் சகோதரிகளையும் **"Franciscan Leadership and the Relevance of the life of Francis today"** என்ற கருத்தரங்கில் ஆர்வத்துடனும், முழுமையாகவும் பங்கேற்க அன்போடு வரவேற்றார்கள். இதனையடுத்து ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் பிரதிநிதியாக மூவர் முன்வந்து தலைமை அன்னைக்கு அன்பளிப்பாக தென்னைக்கன்று வழங்கினார்கள்.







சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி அவர்கள் கருத்தரங்கை வழிநடத்த அருட்பணியாளரை அழைக்க அவர்களும் சபையின் பல்வேறு செயல்பாடுகளைப் பாராட்டி, **“வழிகாட்டி வலிமையாக..”** என்ற தலைப்பில் கருத்துப் பகிர்வை தொடங்கினார்கள். கனவை நனவாக்கும் ஆற்றல்தான் தலைமைத்துவம் என்றும், சரியான செயலைச் செய்தல், கடினமான முடிவுகளை எடுத்தல் வேண்டும் என்றும், அடுத்தவரின் தேவைகளுக்காக முடிவெடுக்க, இரக்க உணர்வு இருக்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

தந்தை பிரான்சிஸ் அசிசியின் தலைமை **“ஆற்றல்படுத்துதல்”** ஆகும். உருவாக்குதல், உயிருள்ளதாக்குதல், உணர்வுள்ளதாக்குதல் இவைகள் புனித பிரான்சிஸ் அசிசியின் தலைமைத்துவத்தின் அறைகூவலாக அனைத்து அவைகளிலும் ஆணித்தரமாக ஒலிக்கிறது என்றும் கூறினார்.

மேலும் ஆற்றல் படுத்துதலுக்கான வரையறை, இயல்புகள் பற்றியும், தவறான தலைமைக்குரிய பண்புகள் பற்றியும் அனுபவங்களோடு பதிவு செய்தார்கள். மேலும் தலைமைப் பண்பை வளர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய பயிற்சிகள் பற்றியும், தன்னாய்வுக்கான வினாக்களும் வழங்கினார். இல்லத்தலைமைச் சகோதரிகளை 13 குழுவாகப் பிரித்து ‘சோப்பு’ விளம்பரம் செய்யுமாறு கூறினார். ஒவ்வொரு குழுவும் தனித்தனி பெயர்களில் விளம்பரம் அளித்தனர். சகோதரிகளின் தனித்தன்மையையும், படைப்பாற்றலையும் அருட்தந்தை அவர்கள் பாராட்டி சிறப்பாக பணியாற்றுமாறு வாழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து சகோதரி கஸ்பார் ஆரோக்கிய மேரி அவர்கள் அருட்தந்தை அவர்களுக்கு நன்றி கூறினார்கள்



மாலை 5.00 மணியளவில் 22-வது பொதுப்பேரவையின் வாழ்வியல் வழிமுறைகளில் ஆன்மீகம் பற்றிய கருத்துப்பகிர்வு குழுக்களில் நடைபெற்றது. 6.00 மணிக்கு சந்தியா தியானமும், அதனைத் தொடர்ந்து திருப்புகழ்மாலையும் செபிக்கப்பட்டது. இவ்வாறு இறையருளால் இந்நாள் இனிதே நிறைவுற்றது.

## 21.09.2022

இரண்டாம் நாள் அமர்வானது 21.09.2022 அன்று புதன்கிழமை காலை தியானத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து காலை திருப்புகழ்மாலை செபிக்கப்பட்டது. திருப்பலியானது **அருட்பணியாளர் பிரிட்டோ (SDB)** அவர்களால் நிறைவேற்றப்பட்டது. இல்லத் தலைமைச் சகோதரிகளிடம் கழுகுப்பார்வை இருக்கவேண்டும். பிரான்சிஸ் போன்று இயற்கையோடு நெருங்கிய உறவு கொள்ள வேண்டும். இறை சந்நிதியில் அமர்ந்து நம்பிக்கையோடு இறைவேண்டல் செய்ய வேண்டும் என்று மறையுரைக் கருத்துகள் வழங்கப்பட்டது.



காலை 8.45 மணியளவில் **“ஆவியானவரே”** என்ற பாடலைப் பாட இன்றைய கருத்தரங்கு ஆரம்பமானது. சபைத் தலைமை அன்னை அவர்கள், இல்லத்தலைமைச் சகோதரிகள் வாழ்வாக்க வேண்டியவை, செயல்படுத்த வேண்டியவை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்கள். அதாவது,

- இறைப்பிரசன்னத்தின் ஒளியில் இறைவனை ஒளியேற்ற வேண்டும்.
- மாதந்தோறும் இல்லத்தவையைக் கூட்டவேண்டும்.
- தலைமைத்துவம் நம்மை பக்குவப்படுத்தும் காலம் என்பதால் எல்லா ஒழுங்குகளையும் எப்போதும் அனுசரிக்க முயல வேண்டும்.
- கருத்தமைதி நாளை அரை நாள் அனுசரிக்க வேண்டும்.
- செப நேரங்களில் இறைவார்த்தைகளைப் பயன்படுத்தி செபிக்க வேண்டும்.
- சகோதரிகளின் உடல் நலத்தைப் பொறுப்போடு கவனித்துக் கொள்ள வேண்டும்.
- நிறுவனத்தில் தாளாளராக இருப்பவர்கள் கருணைக் குடில் இல்லங்களைப் பார்வையிட வேண்டும்.
- பள்ளிகளில் நடைபெறும் நிகழ்வுகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.
- கருணைக் குடில் இல்லக் குழந்தைகளை எந்த வேலைக்கும் பயன்படுத்தக் கூடாது.
- இந்து மாணவிகளை திருவழிபாடு மற்றும் செபங்களில் பங்கேற்க வலியுறுத்தக் கூடாது.
- **Budget** சபையில் தாரளமாக கொடுக்கப்பட்டுள்ளதால் சகோதரிகளுக்கு உணவு தாரளமாகக் கொடுக்க வேண்டும்.
- பங்குப் பணிகளைத் திட்டமிட்டுக் கொள்ளுதல்.

- சகோதரிகளை உறுதிப்படுத்தி, உற்சாகப்படுத்துதல்.
- வயதில் மூத்த சகோதரிகளை நன்கு பராமரிக்க வேண்டும்.

இவ்வாறாக அனைவரும் அர்ப்பண வாழ்வில் சிறப்பாக வாழ இல்லத் தலைமைச் சகோதரிகள் உந்து சக்தியாக இருக்க வேண்டும் என்று சபைத் தலைமையன்னை அவர்கள் கூறினார்கள். அதனைத் தொடர்ந்து 22-வது பொதுப் பேரவையின் வாழ்வியல் வழிமுறைகளில் **"கூடிவாழ்வோம்"** என்ற தலைப்பில் குழு விவாதம் நடைபெற்றது.



மதிய உணவிற்குப்பின் ஒவ்வொரு குழுவின் அறிக்கையையும், அவர்தம் செயலர்கள் பொதுவில் வாசிக்க, சபைத் தலைமை அன்னை அவர்கள் விளக்கம் அளித்து உறுதிப்படுத்தினார்கள். இல்லத் தலைமைச் சகோதரிகள் தன்னுடன் இருக்கும் சகோதரிகளை ஒருங்கிணைந்து செயல்பட வாழ்த்துக் கூறினார்கள். தொடர்ந்து ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள இல்லத்தலைமைச் சகோதரிகள் அந்தந்த மாநிலத் தலைமைச் சகோதரிகளுடனும், வட்டாரத்தின்கீழ் உள்ள இல்லத்தலைமைச் சகோதரிகள், வட்டாரத் தலைமைச் சகோதரியுடனும், தலைமையகத்தின் கீழ் செயல்படும் இல்லத் தலைமைச் சகோதரிகள் சபைத் தலைமை அன்னையுடனும் அமர்ந்து தங்களது இல்லத் தேவைகளைப்பற்றி பேசினார்கள். தலைமை அன்னை அவர்கள் தனிப்பட்ட சகோதரிக்கும், ஒவ்வொரு குழுமத்துக்கும் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கி, அதை ஆழமாக கருத்தூன்றி படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.



இறுதியாக சகோ. அருள்சாந்தி மேரி (1031), சகோ. எலிசபெத் ராணி (999), சகோ. சம்மனசு மேரி (1066) ஆகிய மூவரும் அனைவருக்கும் நன்றி கூற, **'அருள்நிறை அம்மா'** என்ற சபைப் பாடல் வழியாக, அடைக்கலத் தாய்க்கு நன்றி கூற கருத்தரங்கு இனிமையாக நிறைவு பெற்றது.







அனைவரும் உள்ளத்தில் ஒளியேந்தியவர்களாய் அவரவர்தம் இல்லம் நோக்கி விரைந்தனர்.

தன்னலம் இழந்து பிறர் நலம் அறிந்து,
தேவைகள் தெரிந்து தன்மையாய் பேசி,
உடல் நலம் பேணி உண்மை அன்பு காட்டி,
தன்னிடம் உள்ளவர்களைத் தட்டிக் கொடுக்கும்
உன்னதமே! தலைமைப் பண்பாகும்.

திண்டுக்கல் மாநிலத் தலைமையகம்.

# சர்வதேச அளவில் விளையாட்டுத் துறையில் முதலிடம் பெற்றுள்ள திண்டுக்கல், பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

"உன் களஞ்சியங்களிலும்,
நீ மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும்
நீ ஆசி பெறும்படி ஆண்டவர் ஆணையிடுவார்" (உபா 28:8)

என்ற இறைவார்த்தைக்கேற்ப, இறைவனை முன்னிறுத்தி, அடைக்கல அன்னை சபை அருட்சகோதரிகளால் பெண்களின் உயர்கல்விக்கென்று திண்டுக்கல் மண்ணில் தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி. எம் கல்லூரி பன்முகத் திறமைகளைக் கொண்ட மாணவிகளை உருவாக்குவதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. மாணவிகள் உயர்கல்வியில் மட்டுமல்லாது பல துறையிலும் சாதனைப் படைத்து வருகின்றனர். குறிப்பாக, விளையாட்டுத் துறையில் எம் மாணவிகளின் சாதனைகள் பாராட்டுதற்குரியது. மாணவிகளின் திறமைகளைக் கண்டுணர்ந்து பல்வேறு போட்டிகளுக்கானப் பயிற்சிகளையும் வாய்ப்புகளையும் வழங்குவதில் எம் கல்லூரியின் உடற்கல்வி பேராசிரியர், திருமதி ஜெஸிந்தா ராணி அவர்களின் பணி அளப்பறியதாகும். திண்டுக்கல் வட்டாரப் பகுதி கல்லூரிகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் எம் மாணவிகள் பங்கேற்று பல பரிசுகளையும், கேடயங்களையும் பெற்று எம் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். விளையாட்டுத் துறையில் எம் கல்லூரி மாணவிகளின் சாதனைகளில் சில.

- பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் உறுப்புக் கல்லூரிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் எம் கல்லூரி மாணவிகள் பங்கேற்று Form 3க்கான சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர்.
- தஞ்சாவூர் பெரியார் மணியம்மை கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான கைப்பந்து போட்டியில் எம் கல்லூரி மாணவிகள் பங்கேற்று முதலிடம் பெற்று பதக்கங்கள் மற்றும் கேடயத்தையும் பெற்றுள்ளனர்.
- தேசிய அளவில் உத்திரபிரதேசத்தில் நடந்த கைப்பந்து போட்டியில் 13 மாணவிகள் முதலிடம் பிடித்து பதக்கம் மற்றும் Form 2க்கான சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

➢ இம்மாணவிகளில் 6 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு **சர்வதேச அளவில் நேபாளத்தில் நடந்த கைப்பந்து போட்டியிலும் முதலிடம்** பெற்றதோடு **ஃபார்ம் 1க்கான** சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

"நாம் செய்யும் செயல் சிறிதாயினும்
அதன் மேல் கொண்ட இணக்கத்தால்
அச்செயல் பெரிதாகும்"

என்பதற்கிணங்க, மாணவிகள் பல்வேறு போட்டிகளில் ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும் கலந்து பல வெற்றிக் கோப்பைகளைப் பெற்றுள்ளனர். மாணவிகளின் திறன்களை ஊக்கப்படுத்தும் விதமாக பல்வேறு அமைப்பினர்கள் தங்களது நன்கொடைகளை வழங்கி உற்சாகப்படுத்தி வருகின்றனர். மேற்கூறிய சாதனைகள் அனைத்தும் எம் மாணவிகளின் திறமைக்கானச் சான்றுகளாக அமைந்துள்ளன. இத்தகையச் சிறப்புகளைக் கொண்டு விளங்கும் எம் கல்லூரி, தொடங்கப்பட்ட குறுகிய காலத்திலேயே விளையாட்டுத் துறையில் தனக்கானத் தடத்தைப் பதித்து சிறப்புடன் விளங்குகிறது. இவ்வெற்றி வாய்ப்புக்கான பின்புலமாகவும் ஊக்கமளிப்பவர்களாகவும் விளங்கும் எம் கல்லூரியின் தலைமை அன்னை அவர்களுக்கும் மற்றும் எம் கல்லூரி செயலர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றோம். மேலும், எம் மாணவிகள் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க பக்க பலமாக இருக்கும் கல்லூரி நிர்வாகி, அருட்சகோதரிகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் அனைவருக்கும் வாழ்த்துகளைக் கூறுவதில் பெருமிதம் கொள்கின்றோம்.



**பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**திண்டுக்கல்**

# “அண்டி வருவோரை அரவணைக்கும் அடைக்கல அன்னையின் புரட்சி விடியல்கள்”

உலக மக்கள் யாவரையும் காப்பவளே!
அண்டி வருவோரை ஆதரவாய் அணைப்பவளே!
துரும்பாய் உள்ளோருக்கு அரும்பாய் உதிப்பவளே!
ஏழையரின் உள்ளத்தில் மலையாய் உயர்ந்தவளே!
எளியோரின் கண்ணீரை கருணையாய் துடைப்பவளே!
அற்புதத்தை எந்நாளும் ஈடின்றி பொழிபவளே!
இயற்கையில் எழிலாய் எம்மில் உறைபவளே!
உனை வணங்குவோருக்கு புன்னகை உதிர்ப்பவளே!

என அத்துணை பெரும் மதிப்பிற்குரியவள்தான் நம் அடைக்கலத் தாய்.

**“தாழ்விலே பெருமையும், வாழ்விலே தாழ்வினையும் கண்டவள், மௌனத்தில் வலிமை கொண்டவள்”** நம் அடைக்கல அன்னை. சபையைக் கரங்களில் தாங்கி, நெஞ்சில் நிறுத்தி, நிழலாய் நின்று எம்மைத் தாங்கும் நிழல் ஓவியம்.

13.08.2022 அன்று காலை 5.30 மணி அளவில் குதூகலமாக, உற்சாகமாக, மனமகிழ்வோடு காலை வழிபாட்டில் பாடல் வழியாக அடைக்கல அன்னையைப் போற்றி புகழ்ந்து மன்னை ருக்குமணிபாளைய இல்லக்குழுமச் சகோதரிகளோடு கரம்கொடுத்து மகிழ்ச்சியோடு பகிர்ந்துகொண்டு இந்த நாளைத் தொடங்கினோம்.





மேலும் அன்று 11.30 மணி அளவில் எமது இல்லம் விழாக்கோலம் பூண்டது. சந்தனக் குங்குமத் திலகமிட்டு, இலச்சினை அணிவிக்கப்பட்டு நம் சபையின் தனிவரத்தை வாழ்வாக்க எம் விடுதியில் உள்ள 30 மாணவிகளுடன் **“நாங்கள் கடவுளின் உடன் உழைப்பாளர்கள், நீங்கள் கடவுள் பண்படுத்தும் தோட்டம்”** என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப 15 உடன் உழைப்பாளர்கள்,

மற்றும் தூய வளனார் பெண்கள் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், தூய வளனார் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், மற்றும் அலுவலக அன்பர்கள் ஆகிய இவர்களுடன் நம் பாசம் மிகு அருள்பணியாளர் வியானி மற்றும் ஒளிமதி அருள்பணியாளர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு “புளுஸ்டார் பேண்டு இசைக்குழு” வழங்கிய **அடைக்கல மாதாவே** என்ற வாதிய இசை முழக்கத்துடன் விடுதியின் முதல் தளத்தில் பவனியாக திருப்பலி நடக்க இருக்கின்ற இடத்திற்கு வரவேற்று,


“உறவெல்லாம் கூடிவர, உற்சாகம் உண்மை பொங்க, வலம்புரி சங்கெடுத்து வானுயர வாழ்த்தும்” விதமாக எம் விடுதி மாணவச் செல்வங்கள் கலையிலே சிறந்த கலையாம் பரத நாட்டியத்துடன் எம் அருட்சகோதரிகளையும், அருட்பணியாளர்களையும் வரவேற்று திருவழிப்பாட்டிற்கு அழைத்துச் சென்றோம். இன்னலகற்றிடும் இதயமாய் புயலில் புண்ணியம் செய்த, புண்ணியத்தாயின் புகழ் புவியெங்கும் பரவிடும் வகையில் அடைக்கலச் சபையின் வரலாறு, பணிகளை Projector வழியாக திரையிட்டுக்காட்டி பார்ப்போரை பரவசமூட்டச் செய்தோம். பின்னர் ஏழு பெண்களால் உருவாக்கப்பட்ட இச்சபையின் தொடக்கத்தின் நினைவாக கும்ப ஆரத்தி எடுத்து அருட்பணியாளர்களை திருப்பலி பீடத்திற்கு அழைத்துச் சென்றோம். அடைக்கல அன்னைக்குப் புகழ் சேர்க்கும் விதமாக அருட்தந்தை வியானி அவர்கள் சிறப்பு மறையுரை ஆற்றினார்கள். திருப்பலியின் அனைத்து நிகழ்வுகளையும் அர்த்தமுள்ள விதத்தில் ஆரவார உற்சாகத்துடன் சிறப்பித்தோம். திருப்பலியின் முடிவில் இல்லத்தலைமைச் சகோதரி ஜெயராணி அவர்கள் அருட்தந்தையர்களைக் கவுரவித்து, மற்ற விருந்தினர்களுக்கு நன்றி கூறினார்கள்.

பின்னர் மகிழ்ச்சியோடு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மாணவக் கண்மணிகளோடு புகைப்படம் எடுத்துக்கொண்டோம். நம் தமிழகத்தின் பாரம்பரியத்தின்படி இந்நிகழ்விற்குப் பின்னர் பல்வேறு அறுசுவையுடைய உணவு பதார்த்தங்களுடன் அன்பின் விருந்து அனைவருக்கும் வழங்கப்பட்டது. மிக நேர்த்தியாகத் தொடங்கப்பட்ட நம் அன்னையின் விழாவானது எல்லோர் மனமும் நிறைவடைய, மிகவும் மகிழ்ச்சியுடன் இனிதே நிறைவடைந்தது.



# COTTAGE INSPECTION TEAM

"தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும், இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார் - (லூக் 10: 1)"



29.09.2022 அன்று காலை 7.30 மணியளவில் நம் சபைச் சகோதரிகளால் பராமரிக்கப்பட்டு வரும் கருணை, குடில் இல்லங்களைப் பார்வையிட (Inspection Team) நம் சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி (706) அவர்கள் ஒரு குழுவை தயாரித்து அந்த குழுவிற்கு ஆலோசனைகளும் கருத்துக்களும் வழங்க ஒரு நாள் கருத்தமர்வை தஞ்சை மாநிலத் தலைமையத்தில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த கருத்தரங்கிற்கு மையச் செயலர் சகோ. ரீட்டா ராணி (979) அவர்களும் மூன்று மாநிலங்களிலிருந்து சகோதரிகளும் வருகைத் தந்தார்கள். காலை உணவை முடித்த பிறகு 8.00 மணியளவில் அனைவரும் திருப்பலியில் கலந்து கொண்டார்கள். பின்னர் தஞ்சை மாவட்டத்திலிருந்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்திலிருந்து **திரு. அசோக்** மற்றும் கணக்குப் பிரிவிலிருந்து **திருமதி சந்தான லெட்சுமி** இருவரும் வருகைத் தந்தார்கள். சகோ. ஜீலியா மெர்சி மேரி அவர்களின் தொடக்கச் செபத்துடன்



கருத்தரங்கு ஆரம்பமானது. தஞ்சை மாநிலத் தலைமைச் சகோதரி ஜெசிந்தா அவர்கள் வருகைத் தந்த சபைத் தலைமை அன்னை மற்றும் சிறப்பு விருந்தினர்களையும் அனைத்து சகோதரிகளையும் வரவேற்றார்கள்.

அதன் பிறகு சபைத் தலைமை அன்னை அவர்கள் சகோதரிகள் எதற்காக வரவழைக்கப்பட்டார்கள் என்பதைப் பற்றிய தொடக்கவுரை நிகழ்த்தினார்கள். பின்னர் திரு. அசோக் அவர்கள் இன்றைய காலக்கட்டத்தில் குழந்தைகளைப் பராமரிப்பது என்பது மிகவும் சவாலான ஒன்றாக இருப்பதால் இந்த சூழ்நிலையிலும் அடைக்கல அன்னை சபை மிகவும் சவாலான பணியை அசாதாரணமாக செய்துவருதை நினைத்து பெருமைப்படுவதாக எடுத்துக் கூறினார்கள். அதன் பிறகு அவர் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் பின்வருமாறு...

- CWC Order பெற்ற பிறகே குழந்தைகளை இல்லங்களில் (Cottage and Boarding) சேர்க்க வேண்டும்.




- பொதுவாகக் குழந்தைகளைப் பொறுத்தவரை சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள், தவறிழைக்கும் குழந்தைகள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குழந்தைகள், தாய் தந்தையை இழந்த குழந்தைகள் இது போன்ற குழந்தைகளையே நாம் குடில் இல்லங்களில் சேர்க்க வேண்டும்.
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையின்படி குழந்தைகளை வைத்துக் கொள்வோம். அதற்கு மேல் குழந்தைகளைச் சேர்க்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அனைத்துக் குழந்தைகளும் JJC Act -இல் சேர்க்கப் பட்டுள்ளார்களா என்பதைக் கவனிக்க வேண்டும்.
- அனைத்து வகையான சான்றிதழ்களும் வாங்கப்பட்டு நடைமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறதா? எனப் பார்வையிட வேண்டும்.
- பார்வையிடச் செல்லும் பொழுது அனைத்து Staff சான்றிதழ்கமும் சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகிறார்களா எனப் பார்க்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு வழங்கப்படும் தொகைக் குழந்தைகளின் நலனுக்காக மட்டுமே செலவழிக்கப்படுகிறதா எனவும் பார்க்கவேண்டும்.

எனத் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அதன் பிறகு திருமதி சந்தான லெட்சுமி அவர்கள் கணக்கு சம்பந்தமான விவரங்களைச் சகோதரிகளோடு பகிர்ந்து கொண்டார்கள்.



- ➢ Stock Register சரியாகப் பராமரிக்கப்பட்டு வருவதோடு அன்றன்றைய நாளுக்கான பொருட்கள் கழிக்கப்பட்டு கணக்கில் வரவு வைக்கப்படுகின்றதா என்பதைப் பார்க்க வேண்டும்.
- ➢ குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் பொருட்கள் ஏட்டில் எழுதப்பட்டு கையெழுத்து வாங்கி பராமரிக்கப்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.
- ➢ ஊதியம் சரியாகக் கொடுக்கப்பட்டு வருகிறா என்பதையும் சரிபார்க்க வேண்டும்.
- ➢ நியமித்துள்ள ஊழியர்கள் சரியானத் தகுதியுடன் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்றும் அவர்களின் சான்றிதழ்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார் என்பதையும் கவனிக்க வேண்டும்.

எனத் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அதன் பின்னர் சபைத் தலைமை அன்னை அவர்கள் குடில் இல்லங்களைப் பார்வையிடச் செல்லும் சகோதரிகளோடு பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் பின்வருமாறு....

- ❖ இல்லங்களுக்குச் செல்லும் பொழுது தூய்மைப் பார்க்க வேண்டும்.
- ❖ உணவுப் பட்டியல் படி உணவு வழங்கப்படுகிறதா என்பதை கவனிக்க வேண்டும்
- ❖ ஊழியர்கள் தங்களது பணிகளைச் சரிவர செய்கின்றார்களா என்பதைப் பார்க்க வேண்டும்.
- ❖ ஆவணங்கள் சரியாகப் பராமரிக்கப்படுகிறதா என்று கவனிக்க வேண்டும்.
- ❖ குழந்தைகளிடம் தனித்தனியாகப் பேசி அவர்களின் கருத்துக்களைக் கேட்க வேண்டும்.
- ❖ இல்லங்களுக்குச் செல்லும்பொழுது அறிவிப்பின்றி செல்ல வேண்டும்.
- ❖ குழந்தைகளை வேலை வாங்குவதை தவிர்க்கும் படி கேட்டுக்கொள்ள வேண்டும்.



- குழந்தைகளின் கால அட்டவணைப்படி அவர்கள் அன்றைய நாளை பயன்படுத்துகின்றார்களா எனச் சரிபார்க்க வேண்டும்.
- உணவுகளைச் சமைத்தப் பிறகு அது சுவை பார்க்கப்படுகின்றதா அதனுடைய ஆவணங்கள் பராமரிக்கப்படுகின்றதா எனவும் பார்க்க வேண்டும்.
- முடிந்தவரை நீங்கள் பார்வையிடச் செல்லும் பொழுது அங்குள்ள DCPO (District Child Protection Officer) அலுவலரைச் சந்திக்க முயற்சி எடுங்கள்.
- அனைத்து வகையான ஆவணங்களும் சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றதா எனப் பார்வையிட வேண்டும்.
- சந்தேகங்கள் எழும் சமயத்தில் திரு. அசோக் அவர்களைத் தொடர்பு கொண்டு தெளிவு பெற்றுக்கொள்ள வேண்டும்.
- நீங்கள் பார்வையிடச் செல்லும் பொழுது இருக்கும் குறைபாடுகளை எவ்வித முகத்தாட்சனையும் இல்லாமல் குறித்து சபைத் தலைமை அன்னை அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.
- முழு ஊதியம் கொடுக்கப்படுகின்றதா எனவும் பார்வையிட வேண்டும்.

எனத் தனது கருத்துக்களைச் சகோதரிகளோடு பகிர்ந்து கொண்டார்கள். சபை உங்களுக்குத் தந்திருக்கின்ற இந்தப் பொறுப்பான பணியைச் சிறப்பாகவும், பொறுப்புடனும், கடமை உணர்வுடனும் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்கள். இறுதியாக தஞ்சை மாநிலத் தலைமைச் சகோதரி ஜெசிந்தா அவர்களின் நன்றியுரைக்குப் பின் சபைப் பாடலுடன் கருத்தரங்கு இனிதே நிறைவடைந்தது.

# அடைக்கலா உயர்க்கல்வி உதவித்தொகை வழங்கும் விழா

அன்புடையோர் செய்வது அறம்
ஆசையினைத் துறப்பதும் அறம்
ஒப்பில்லா ஒண்தமிழ் ஓதுவது அறம்
மனம் விரும்பிச் செய்வதே அறம்
மறுமையிலும் உடன்வருவது அறம்
கொடுப்பது ஒருவகை அறமென்றால்
கொள்கைவழி நடப்பதும் அறமே

எனவே தான் **“அறம் செய்ய விரும்பு”** என்றார் ஔவை.

**“அறம் செய்து அருளுடையார் ஆகுமின்”** என்கிறது நாலடியார்.

**“அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை” “அறந்தான் வருவரே இன்பம்”** என்கிறது திருக்குறள்.

தண்டல் எடுத்தாலும் தன்னலம் பார்க்காமல், அடைக்கலமாய் இருந்த குழந்தைகளின் பசி போக்கும் தாயாய் வாழ்ந்த முன்னோர்களின் பாரம்பரியத்தின் வழி வந்த அடைக்கல அன்னை சபையோராகிய நாம், மரபு பிறழாமல் வாழ்வதன் வெளிப்பாடே **அடைக்கலாக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்** என்றால் அது மிகையில்லை. கற்றக் கல்வியை விட உற்றத் துணை வேறெதுவும் இல்லை என்பதாலே கல்வி நிலையங்கள், கல்லூரிகள் அமைத்து கற்பித்தல் பணியினை முத்தாய்ப்பாய்ச் செய்கின்றோம். கல்லூரிக் கல்வியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரி மாணவர் என சாதி, மத, இன வேறுபாடு இன்றி உதவி செய்ய என நம் சபையால் தொடங்கப்பட்டுள்ள **“அடைக்கலாக் கல்வி உதவித்தொகை விருது”** நமது தனிவரத்திற்கே பெருமை சேர்க்கும் உயரிய நிகழ்வு. கொரோனா காலத்தில் கொடையளிக்க இயலாத நிலையில் இடைநின்ற இத்திட்டம், இந்தாண்டு 25.09.2022 அன்று ஆண்டவரின் பேரருளால் நிறைவேறியது. சரியாக 9.15 மணிக்கு இறைவணக்கத்தோடும், அகல்விளக்கு ஒளியேற்றதோடும் விழா ஆரம்பமானது. கல்வியின் சிறப்பும் பெண்மையின் பெருமையும் பற்றி **திருமதி. நிவேதிதா லூயிஸ்** (Herstory Co-founder) அவர்களால் ஒரு மணி நேர கருந்துரையானது இளையோருக்கு வழங்கப்பட்டது.







Adaikala
Scholarship Award Day

Scholarship Award Day

Scholarship Award Day

Scholarship Award Day





சரியாக 10.40 மணியளவில் விழாத்தலைவர் விடுதலை சிறுத்தைக் கட்சியின் தலைவர் **திருவாளர் தொல். திருமாவளவன்** மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கு மலர்ச்செண்டு வழங்கி, இசைக்கருவிகள் முழங்க கலையரங்கிற்கு வருகைத் தர, எண் திசையிலுமிருந்து வருகைப் புரிந்த இளையோர் அரங்கை நிரப்ப, இறை வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்களோடு விழாத் தொடங்கியது. வண்ணத்தோகை விரித்து, தலையிலே காகம் தாங்கி பொய்க்கால் குதிரையிலே ஒய்யாரமாய் அமர்ந்து, தஞ்சை விளார் கல்லூரி மாணவியர் ஆடிய நாட்டுப்புற நடனத்தினை அரங்கில் அமர்ந்திருந்தோர் விழி இமைக்காமல் வியந்து பார்த்து மகிழ்ந்தனர். நம் சபையின் துணைத் தலைமைச் சகோதரி பவுலின் (616) அவர்கள் வரவேற்புரை நல்கினார்கள். சபைத் தலைமை அன்னை மரிய பிலோமினா (706) அவர்கள் அடைக்கலாக் கல்வி உதவித்தொகை விருது பற்றி அறிமுகம் செய்தார்கள். பின் விழாத் தலைவர் திருவாளர் தொல். திருமாவளவன் தலைவர் உரையாற்றி 15 மாணவர் மாணவியர்களுக்கு காசோலை வழங்கியபின் விடைபெற்றுச் சென்றார்கள்.

அதன் பிறகு அருட்தந்தை சேவியர் அருள்ராஜ் உயர்நீதி மன்ற மூத்த வழக்கறிஞர், திருமதி நிவேதிதா லூயிஸ் (Herstory Co-Founder), அருட்பணி. ஜெயசீலன் (துரைப்பாக்கம் பங்குத்தந்தை) ஆகியோர் வாழ்த்துரை வழங்கியபின் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் சபைத் தலைமை அன்னை மரிய பிலோமினா, துணைத் தலைமைச் சகோதரி பவுலின் (616), திண்டுக்கல் மாநிலத் தலைமைச் சகோதரி சகோ. பவுலின், சென்னை மாநிலத் தலைமைச் சகோதரி சகோ. ஜூலியட், தஞ்சை மாநிலத் தலைமைச் சகோதரி சகோ. ஜெசிந்தா ஆகியோர் உதவித்தொகைக்கான காசோலையினை அனைவருக்கும் வழங்கியபின் நாட்டுப்பண் இசைக்க இவ்விழா ஆண்டவரின் பேரிரக்கத்தாலும், அன்னையின் பேரருளாலும், இனிதே நிறைவுற்றது. ஆண்டவர் வாழ்த்தப் பெறுவராக!

# TRANSMISSION MEET IN THANJAVUR





























# TRANSMISSION MEET IN THANJAVUR





# TRANSMISSION MEET IN BETHANIA














# TRANSMISSION MEET IN CHENNAI
















# TRANSMISSION MEET IN NAZARETH


















# TRANSMISSION MEET IN DINDIGUL



















# TRANSMISSION MEET IN BETHELAHEM


















# TRANSMISSION MEET IN GENERALATE



# பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான கருத்தரங்கு

17.09.2022 சனிக்கிழமை அன்று காலை 8.00 மணியளவில் தஞ்சை மாநிலத் தலைமை இல்லத்தில் சபை மற்றும் மறைமாவட்ட பள்ளிகளின் தலைமையாசிரியைச் சகோதரிகள் அனைவரும் வருகைத் தந்து தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டார்கள். அதன்பிறகு 9.00 மணியளவில் **அருட்பணியாளர் குழந்தை (OFM) Cap.** அவர்களால் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இந்த நாள் சபைத் தொடங்கப்பட்ட நாளாகவும், நம் தந்தை அசிசி பிரான்சிஸ் அவர்களின் ஐந்து காய திருநாள் என்பதாலும் அனைத்துச் சகோதரிகளும் திருப்பலியில் தங்கள் வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்துக் கொண்டார்கள். திருப்பலி முடிந்தவுடன் சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி (706) அவர்கள் மற்றும் அன்றைய நாளில் தங்களது பிறந்தநாளைச் சிறப்பித்த இரு சகோதரிகள் அனைவரும் இணைந்து மகிழ்ச்சியை இரட்டிப்பாக்க கேக் வெட்டி சிறப்பு செய்தார்கள்.

சரியாக 10.30 மணியளவில் கருத்தரங்கு கூட்டத்தில் அனைவரும் ஒன்றுகூட **சகோதரி அமலி தஞ்சை மாநிலச் சமூகப்பணி ஒருங்கிணைப்பாளர்** அவர்களின் தலைமையில் தொடக்க செபம் செபிக்கக் கூட்டம் ஆரம்பமானது. **தஞ்சை மாநிலத் தலைமைச் சகோதரி ஜெசிந்தா மேரி** அவர்கள் கருத்தரங்கிற்கு வருகைத் தந்த சபைத் தலைமை அன்னை, அருட்பணியாளர் மற்றும் கருத்துரையாளர்கள் அனைவரையும் வரவேற்றவுடன் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டு, புத்தகங்கள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. காலை 10.45 மணியளவில் **சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி** அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார்கள். அதில் அரசாங்கத்திடமிருந்தும் சமூகச் சூழலிலிருந்தும் பல சவால்களைச் சந்தித்துக் கொண்டிருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் பள்ளியில் பணிபுரிவதே சவாலான ஒன்றுதான் அதுவும் தலைமையாசிரியர் பணி மிகவும் சவாலான பணி இருந்தபோதிலும் இந்த சவால்களைச் சந்தித்து சவால்களுக்கு மத்தியிலும் உங்கள் பணியை எதிர்வரும் சவால்களோடு மேற்கொள்ள இந்த பயிலரங்கம் உங்களுக்கு உதவும் என்று கூறி சகோதரிகளைத் தங்களின் தொடக்கவுரை வழியாக உற்சாகப் படுத்தினார்கள்.




11.00 மணியளவில் வான்முகில் இயக்குநர் **திரு.ம.பிரிட்டோ** அவர்களால் அறிமுக உரை நிகழ்த்தப்பட்டது. அதில் அரசியல் சாசனத்தின் மிக முக்கியப் பண்பு

மதச்சார்பின்மை, சம உரிமை ஆகியவையே. ஆனால் தற்பொழுதுள்ள இந்திய அரசாங்கம் தனியாக ஒரு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதிக் கொண்டிருக்கின்றது. அவர்கள் எழுதும் அரசியலமைப்புச் சட்டத்தில் மதச்சார்பின்மை, சம உரிமை இரண்டிற்கும் இடம் இல்லை. அப்படி என்றால் சிறுபான்மையினராகிய நமது நிலை என்ன? இந்திய அரசியல் சாசனத்தின் முகப்புரையின் ஆரம்பமே "We, the people of India" என்று தான் தொடங்குகின்றது. எனவே இந்த நிலை மாறி நாம் அரசியல் சாசனத்தை பாதுகாக்கும் தருணத்தில் இருக்கின்றோம். பாஜக ஆட்சி மறுபடியும் ஆட்சிக்கு வந்தால் நம் பள்ளிகளின் நிலை என்னவாகும்? என்று அச்சமாக உள்ளது. எனவே விழிப்புணர்வுடன் செயல்படுவோம் எனத் தனது அறிமுக உரையை சிறப்பாக நிகழ்த்தினார்கள்.




தேநீருக்குப் பின் அனைவரும் ஒன்று கூடிய பின் முதல் அமர்வானது ஆரம்பமானது. கப்புச்சின் சபையின் அருட்பணியாளரும், சென்னை பல்கலைக்கழக மொழியியல் துறை பேராசிரியருமான **அருட்பணி குழந்தை (OFM) Cap.** அவர்கள் "**இன்றைய சூழலும் அரசமைப்பு உரிமைக் கல்வியின் அவசியமும்**" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள்.

பாஜக அரசு நம் கண்முன் அச்சுறுத்தலாக உள்ளது. அவர்கள் 5M இல்லாத இந்தியாவை உருவாக்க நினைக்கின்றார்கள்.

1. Minorities – சிறுபான்மையினர்
2. Missionaries
3. Marxists
4. Macaulay Education System
5. Materialism – பகுத்தறிவு சிந்தனை

இந்திய நாட்டை இந்து நாடாக மாற்ற நினைக்கின்றார்கள். New Education Policy-யை பின்பற்றி வர்ணாசிரம முறையை உட்புகுத்த நினைக்கின்றார்கள். இந்தக் கல்விமுறை கொஞ்சம் கொஞ்சமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை எடுத்துக் கூறி நாம் இன்னும் விழிப்புணர்வோடும், உத்வேகத்தோடும் செயல்பட வேண்டும் என வலியுறுத்தி தனது உரையை நிறைவு செய்தார்கள்.

அதன் பிறகு இரண்டாம் அமர்வில் **திரு.ம. பிரிட்டோ** அவர்கள் குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தி பேசினார்கள்.

❖ RSS அமைப்பினர் சிறுபான்மையினருக்கு எதிராக செயல்படுகின்றனர். அவர்கள்

நம்மை எதிரிகளாகப் பார்க்கின்றனர். இளைஞர்களை இத்தகைய மனநிலையிலேயே உருவாக்கி வருகின்றனர்.

- ❖ Continuous & Systematic attempts to subvert the constitutional / democratic process.
- ❖ Weakening of higher Judiciary (judges with RSS mindset)
- ❖ Impact of NEP
    - Anti Poor
    - Anti Tamils
    - Anti Minorities
    - Anti Dalits
    - Anti-Children




ஆதரிப்பது - Corporatization, Saffronisation, Centralization

நமக்கிருக்கும் சவால் இந்த சவால்களை மேற்கொள்ளும் காலக்கட்டத்தில் இருக்கின்றோம். எனவே நம்மிடம் கல்வி கற்கும் குழந்தைகளுக்கு நாம்தான் கட்டாயம் கற்றுத் தர கடமைபட்டிருக்கின்றோம்.

- அறிவு சார்ந்த (knowledge level)
- திறமை சார்ந்த (Skills level)
- அணுகுமுறை சார்ந்த (Attitude level)

கல்வியைக் கொடுக்கவே இந்த அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம். ஆனால் இனிவரும் கல்வித் திட்டம் பிரிக்கும் கருவியாக மாறிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது. கல்வி பிரிக்கும் கல்வியல்ல. ஒருங்கிணைக்கும் கல்வியையே நாம் தொடர்ந்து கற்றுக்கொடுப்போம் என, தனது சிந்தனைக் கருத்துக்களை சிறப்பாக எடுத்துக் கூறினார்கள்.

மதிய உணவுக்குப் பின் 2 மணியளவில் மூன்றாம் அமர்வு ஆரம்பமானது. **வான்முகில் மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. கா. கணேசன் அவர்கள் "இந்தியக் குடிமக்களாகிய நாம்"** என்ற பாடநூலை அறிமுகப்படுத்தி பேசினார்கள். அவரைத் தொடர்ந்து, **வான்முகில் மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர் திருமதி க. பிரியா** அவர்கள் தமிழகத்தில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற செயல்பாடுகளைக் குறித்து பேசினார்கள். கல்வியானது குழந்தைகள், பெண்களிடம் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அனைவரும் சிறப்பாக செயல்படுகின்றனர் என பல உண்மை நிகழ்வுகளை முன் வைத்தார்கள்.


இறுதியாக **சகோ. செபஸ்டி தஞ்சை மாநிலத் துணைத் தலைமைச் சகோதரி** அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற அன்றைய நாள் கருத்தரங்கு நிறைவு பெற்றது.

பின்னர் தேநீர் இடைவெளிக்குப் பிறகு மாலை 5.00 மணியளவில் சகோதரிகள் அனைவரும் சபையளவிலும், மறைமாவட்ட அளவிலும் உள்ள **தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள், சிபிசிஇ மற்றும் மெட்ரிக்பள்ளிகள்** என குழுக்களாகப் பிரிந்து அவர்கள் சந்திக்கும் சவால்களைப் பற்றி கலந்துரையாடினார்கள். பேசப்பட்ட கருத்துக்கள் பொது அமர்வில் செயலர் சகோதரிகளால் வாசிக்கப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டது. அன்றைய நாள் மாலை செபத்துடன் அனைத்து நிகழ்வுகளும் நிறைவடைந்தது.



18.09.2022 அன்று காலை 6.00 மணியளவில் **சகோ. வேதா** அவர்களின் வழிநடத்துதலில் காலை செபம் செபிக்கப்பட அனைவரும் பக்தியோடு கலந்து செபித்தனர். அதன் பிறகு காலை 7.00 மணிக்கு **தொன்போஸ்கோ பள்ளியின் தலைமையாசிரியர் அருட்பணியாளர் அல்போன்ஸ்** அவர்களால் கருத்து நிறைந்த மறையுரையுடன் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பின்னர் காலை உணவை முடித்து சரியாக 9.00 மணிக்கு இரண்டாம் நாள் அமர்வு ஆரம்பமானது. சபைத் தலைமை அன்னை மரிய பிலோமி (706) அவர்கள் இந்த அமர்வினை வழிநடத்தினார்கள். சபைத் தலைமை அன்னை அவர்கள் சகோதரிகளோடு பகிர்ந்துகொண்ட கருத்துக்கள்...

- ➢ நம் பணிக்கான மதிப்பெண்கள் ஆசிரியர்களிடமும், பணியாளர்களிடமும், மனிதத் தன்மையோடு நாம் நடந்துகொள்ளும் விதத்தைப் பொறுத்தே கிடைக்கும். நமது பேச்சு பண்பட்டதாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். தினமும் தியானம் செய்வதன் மூலம் நமது உண்மை நிலையை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.
- ➢ **நிர்வாகக் குழுக் கூட்டம்** கட்டாயம் நடத்தப்பட வேண்டும்.
- ➢ பெற்றோரை உட்கார வைத்துப் பேசி அனுப்ப வேண்டும்.
- ➢ **மாணவர் சேர்க்கையை** அதிகப்படுத்த வேண்டும்.
- ➢ மாணவர்கள் மட்டில் அதிக அக்கறையோடு செயல்பட வேண்டும்.
- ➢ தாளாளர், தலைமையாசியர், எழுத்தர் உறவு நன்றாக இருக்க வேண்டும்.
- ➢ தாளாளர் ஆசிரியராகப் பணியாற்றினால் 15 பாடவேளை வழங்க வேண்டும்.
- ➢ நம் பள்ளியில் பயிலும் மாணவர்களை **நம் கல்லூரியில் சேர** நாம் ஊக்கப்படுத்த வேண்டும்.



- **சிறப்புப் பள்ளிக்கு** ஆசிரியர்களிடமிருந்து 1 நாள் அல்லது 2 நாள் ஊதியத்தை வழங்க உற்சாகப்படுத்த வேண்டும்.

இதோடு பல கருத்துக்களை சகோதரிகளுக்கு எடுத்துக்கூறி இன்றைய காலக்கட்டத்தில் நாம் எவ்வாறு சவாலோடு பணியாற்ற வேண்டும் என்பதைத் தெளிவுப்படுத்தினார்கள். அதன்பிறகு **"பள்ளிகளில் நாம் சந்திக்கும் சவால்களும் அதற்குரிய தீர்வுகளும்"** என்ற தலைப்பில் சகோதரிகள் குழுக்களாகச் சென்று கலந்துரையாடி வந்தார்கள். தேநீர் இடைவெளிக்குப் பின் **மையக் கல்வி ஒருங்கிணைப்பாளர் சகோ. மரியா** (714) அவர்களின் நெறிப்படுத்துதலில் குழுக்களாகப் பேசிய கருத்துக்களைச் செயலர் சகோதரிகள் பொதுவில் வாசிக்க நெறியாளர் அதை தெளிவுபடுத்தினார்கள்.

பிற்பகல் 12 மணியளவில் **"பேரவைத் தீர்மானங்களை எப்படி வாழ்வாக்குவது?"** என்ற தலைப்பில் குழுக்களாகச் சகோதரிகள் கலந்துரையாடினார்கள். மதிய உணவிற்குப் பின் 2.00 மணியளவில் பொதுவில் செயலர் சகோதரிகளால் கருத்துக்கள் பொதுவில் வாசிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்பின் மாநிலத் தலைமைச் சகோதரிகள் அந்த அந்த மாநிலச் சகோதரிகளைச் சந்தித்து கலந்துரையாடி தங்கள் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டார்கள். பின்னர் 4.00 மணியளவில் **சகோ. செபஸ்டி, தஞ்சை மாநிலத் துணைத் தலைமைச் சகோதரி** அவர்களின் நன்றியுரைக்குப் பின் அடைக்கல அன்னை பாடலுடன் அன்றைய நாள் நிகழ்வுகள் அனைத்தும் இனிதே நிறைவடைந்தது.

# என்னவொரு இதமான பிரபஞ்சம்

“உதிக்கும் போதும் மறையும் போதும் ரசிக்கும் உலகம்...
உச்சிக்கு வந்தால் திட்டித் தீர்க்கும்...
சூரியனை மட்டுமல்ல. மனிதனின் வளரிச்சியையும் கூட!”
என்னவொரு இதமான காலை
அயலெங்கும் அழகிய மலர்கள்
ஆங்காங்கே குருவியின் மெல்லிசை
புல்நுனியில் படர்ந்த பனித்துளி
ஆசையாய் அசைந்திடும் மலர்ச்செடி
வருடிச் செல்லும் காலைத் தென்றல்
வண்ணப் பறவைகளின் சிறகடிப்பு
வான்வெளியில் மிதக்கும் பஞ்சுமுகில்
கண்விழிக்கும் பகலவன்
எத்துணை வண்ணமய விசித்திரங்கள்
நம் நந்தவன பூமியில்...
எத்துணை தெய்வங்கள் பூமியில் இருந்தாலும்!
உன்னோடு பேசும் தெய்வம்
உன் தாய் தந்தை மட்டுமே!
யோசித்துப் பார் உண்மைப் புரியும்!
அன்போடு அவர்களிடம் பேசி பார் பாசம் புரியும்.



சகோ. பனிமய பிரதீபா (1284).

---

# தேடினேன் அன்பை



என் அன்பின் எல்லையைக் கண்டேன்
உன் பேரன்பில் ஆகாயத்தை கண்டேன்
என் அன்பில் கரையைக் கண்டேன் - உன்
பேரன்பில் தூய்மையைக் கண்டேன்
விழுந்து போனாலும் விருட்சமான விதையாக்கினாய்
சோர்ந்து போனாலும் தாகம் தீர்க்கும் நீரோடையாக்கினாய்
உன்னை என்னில் கண்டேன் வியந்து நின்றேன்
உன் எல்லையில்லா அன்பைக் கண்டு...
பேரன்பே! எந்தன் பிரபஞ்சமே! ஒருங்கிணைந்து நின் வழி நடக்க
பயணிக்கும் எம் பயணத்தைத் திருயாத்திரைப் பயணமாக
இறையருள் பெற இனிதாக்கும்...!

சகோ. ஞான அரசி (1271).

# பிரபஞ்சமே! என் பேரழகே!

பிரபஞ்சப் பேரழகே! கடவுளின் சாயலே!
எல்லா நன்மைத்தனங்களின் பிறப்பிடம் நீ!
இனியவை அனைத்தின் இருப்பிடம் நீ!
உன்னதத்தின் உறைவிடம் நீ!
உன் நினைவு உலகை மறக்கச் செய்கிறது.
உன்னில் கரைய உன்போல் இனிதாய் மாற விளைகிறேன்.
கடவுளின் மாதிரியே! பிரபஞ்சமே!
உன்னோடு கைகோர்த்து நடக்க பேராசை எனக்கு.
உன் தன்னடக்கம் எனதாகட்டும்.
உன் பேரன்பு என்னைப் பாதிக்கட்டும்.
உலகின் மகா சக்தி நீ!
பிரபஞ்சப் பேரழகே!
உன்னை நேசித்து உன்னில் என்னைக் கரைத்து கலந்துவிட ஆசிக்கிறேன்
வரம் அருள்வாய் பிரபஞ்சமே! என் பேரழகே!

சகோ. சூ. மரிய லில்லி மலர் (1282).

# எழில் கொஞ்சும் இயற்கை!

எழில் கொஞ்சும் இயற்கையே! இயற்கையே!
இறை அன்பின் வடிவே என்னே அழகு உன் எழில்
ஜொலிக்கும் சுடரே! பிரபஞ்ச சுவாலையே!
மெல்லிய பனித்துளியே நனைக்கும் குளிர் காற்றே
உன் மெல்ல தொடுதலால் என் உடல் சிலிர்க்கும்
உன் மெல்லிய இசையால் என் இதழ் புன்னகைக்கும்
பூமியின் மடியில் என்னைத் தவழ வைத்து
புதிதாய் ஒரு பிறப்பெடுக்க
ஒரு வாய்ப்புக் கொடுத்த பிரபஞ்ச அழகே!
பிரபஞ்சப் பேரழகே!
பிரபஞ்ச மடியே நீ வாழ்க! வாழ்க!



சகோ. சபீனா செல்வ ராணி (1324).

# இரு!



நம்பிக்கைகுரியவளாயிரு! மன உறுதியாய் இரு!
அன்பாயிரு! அடிமையாயிராதே!
பாசமாயிரு! பகைமையாயிராதே! நட்புடையவராயிரு!
இயற்கையை நேசிப்பவளாயிரு!
இயற்கையை அழிப்பவளாயிராதே!
பிரபஞ்சத்தை நேசிப்பவளாயிரு!
பிரபஞ்சத்தை அழிப்பவளாயிராதே!
குடும்பத்தில் உறவை வளர்த்துக்கொள்
எதிர்மறையாய் பேசாதே!
பிறருக்கு ஒளியாயிரு!
யாரையும் ஓரங்கட்டாதே!
பகைமையாயிராதே தோழைமையோடிரு!
திருத்தப்படும்போது நன்மைகள் செய்ய ஆர்வமாயிரு!

**சகோ. வெரோனா (524).**

---

தானே பிறந்து தனைப் படைத்து தமதென பிரிந்து பரந்து விரிந்த பிரபஞ்சமே!
உன்னுள் எத்துணை ஆழம்! எத்துணை வியப்பு! எத்துணை சக்தி!
உன் எல்லையை வரையறுக்க முடியாமல் மனித குலம் திண்டாட
என்னுள் நீ உன்னுள் நான். உன் எல்லை சக்தி ஆழம் அழகு
அனைத்தும் இறைசக்தியே! இறைசக்தியே பிரபஞ்சம்..!

**சகோ. ஏஞ்சல் சந்தன மேரி (ஆஷா) (1261).**

---

# *பிரபஞ்சம்*



நீக்கமற நிறைந்திருக்கும் இறைசக்தியே!
உன்னில் நானும் என்னில் நீயும்
ஒன்றரக் கலந்திருக்கும் அனைத்து
நொடிகளும் பேரானந்தமே! பெரும் வியப்பே!

**சகோ. ஜெயராக்கினி (1167).**

# ஓ! பிரபஞ்சமே!

வார்த்தையால் உருவாக்கப்பட்ட நீ!
உன்னால் உருவாக்கப்பட்ட என்னை வைத்து
அழகு பார்க்கும் என் கடவுளின் அன்பு
கருந்துளை போன்று நிறையானது
அதனால் தானோ கடவுளின் அன்பைப் போன்று
உன்னையும் அளக்க முடியவில்லை!
தேடற்கரிய பொக்கிஷம் நீ!
தேடுவோர்க்கு அள்ளித் தரும் அமுத சுரப்பி நீ!
புதுமைகள் நிறைந்த புதினம் நீ!
பூரண நிறைவில் மகிழ்விப்பவள் நீ!
மனதின் துக்கங்கள் மறைக்கும் (மாற்றும்)
மகத்துவ சக்தி நீ!
வியக்கிறேன் உன் அழகில்
மயங்குகிறேன் உன் மடியில்
தவிக்கிறேன் உன்னைத் தழுவிட
உன்னில் கலந்திட உனதாய் எனை மாற்று
உன் அன்பைப் பேரன்பை புரிந்துகொள்ள
அருள்வாய் அறியாமை அகற்ற
உன் மௌன மொழியைக் கற்க
தேடுகிறேன் உன்னை!
நீ என்னுள் இருக்கிறாய் என்று மறந்து...



சகோ. இருதயமேரி (1274).

---

# பேரன்பின் பேரழகே! காலம் கடந்த பேரன்பே!

அகழ்வாரைத் தாங்கும் நிலமாய் இரு!
இருளைத் துரத்தும் நெருப்பாய் இரு!
சோர்வை அகற்றும் காற்றாய் இரு!
தாகம் தணிக்கும் நீராய் இரு!
ஆற்றல் தணிக்கும் ஆகாயமாய் இரு!
வாழும் இடத்தில் வாழ்ந்து பார்
வாழ்வு இனிதாகும்.

சகோ. கு. அமுதா மேரி (1229),
திருத்துறைப்பூண்டி.

# பேரன்பே! பேரன்பே! பிரபஞ்சப் பேரன்பே!

மனிதா!
இயற்கையாக கிடைச்சதெல்லாம் செயற்கையாக மாறி
அறிவியலின் ஆதிக்கம் அச்சப்பட வைக்குது...

மின்சாரம் வந்ததும் மின்விசிறி சுற்றுது
காத்து தரும் மரம் மட்டும் மின்னலையில் எரியுது..

மண்ணுக்கு உரம் போட்டு வெதநெல்லு வளருது
மண்ணை உரமாக்கும் மண்புழுதான் மடியுது...

கடல் தண்ணீர் ஒருபக்கம் குடிநீரா மாறுது
தொழிற்சாலைக் கழிவு மட்டும் குடிநீரில் கலக்குது...

மனிதா! பிரபஞ்சத்தின் படைப்புக்களை தன்னுள் உணர்வது எப்போது?
தன்னுள் பிரபஞ்சத்தை கண்டுக்கொள்வது எப்போது?

**சகோ. கிறிஸ்டி நிர்மலா தேவி (1269)**

---

# பேரன்பு



இயற்கையில் இரண்டறக் கலந்தேன்
இறைவனைக் கண்டேன்
காற்றில் தியாகம் - அது என் சுவாசம்
ஆழ்கடல் அமைதி - அது என் தியானம்
பறவைகளின் இசையினில்
பாடுகிறேன் பரமனை
அகழ்வாரைத் தாங்கிய நீ
இகழ்வாரை ஏற்கச் சொன்னாய்
அன்பு மூன்றெழுத்தால்
அகிலத்தையே மறந்தேன்.
அகிலம் படைத்த ஆண்டவனே
அடங்கிவிட்டார் மூன்றாணிகளால்
அடுத்தவர் கொடுத்தது வாழ்க்கை. அதை
அடுத்தவர்க்காய் கொடுப்பதே வாழ்க்கை
தன்னை மறந்து பிறரில் மகிழ்வதே பேரன்பு
மன்னித்து விடு என்பது அன்பு
அப்போதே மறந்துவிட்டேன்
என்பது பேரன்பு!

**சகோ. பூண்டி (1256).**

# பிரபஞ்சமே உன்னில் நான் ரசித்தது

குயில் பாடும் குயில் ஓசை கேட்க
இதம் தரும் குளிர் காற்று பெற
இன்பம் மயக்கும் வாழ்வு அடைய
இயற்கை சோலையில் வாழ்க!
தினந்தோறும் காணும் அழகு ஓவியம் இயற்கை
இவ்வுலகையே வியக்க வைக்கிறது உன் அழகு.
புல்வெளிகள் மேல் படர்ந்திருக்கும் பனித்துளிகள் அழகு
சில்லென்று தரும் மழைச்சாரல் அழகு
மரங்கள் ஒன்றோடொன்று இணைந்து பாடும் இன்னிசை அழகு
மழைக் காலங்களில் மாலையில் வரும் வானவில் அழகு
வண்ண வண்ணங்களில் பூத்து வாசம் கொடுக்கும் பூக்கள் அழகு
நேசமில்லா நெஞ்சங்களிலும் அன்பை விதைப்போம்
துயர் வரும் வேளைகளில் தோள்கொடுப்போம்
இயற்கையைத் தாய்போல் கண்டு மதிப்போம்
இயற்கை நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற பரிசு
இயற்கையை காப்போம். நல்ல இயற்கையை விட்டுச் செல்வோம்
அடுத்த தலைமுறைக்கு பரிசாக.

- சகோ. ரோஸ்லின்.

---

# WHAT IS UNIVERSAL LOVE......?

Cosmos is the gift of God
Be connected with loving lord
Spread your fragrance of love all
Through your loving special call

Loving Lord! How beautiful,
Is your dwelling place.
Let our love be truthful,
In our loving place.

Universal love enfolds the world
So, let your love be pure
March forward to bind the world
God's love will heal U, I'm sure.



# பிரபஞ்சமே! பிரபஞ்சமே!



எங்கெங்கோ தேடித்தேடி அலைந்தேன்
ஏறினேன் இறங்கினேன் ஓடினேன் உனைத்தேடி
காடு மலை ஆறு அருவி என்று
கடலையும் கடந்து சென்றேன்.
ஊர், நாடு, நகரங்கள், கண்டங்களையும்
கடந்து சென்று பார்த்தேன்.
உற்றுப் பார்த்தேன் ஊற்றுக் கண்களில்
தேடிப்பார்த்தேன் தேன் ஓடைகளில்
காடுவலியாக கவலையோடு நடந்தேன்.
தடங்களைக் கண்டேன் இரண்டு ஜோடிகள்.
சற்றுநேரத்தில் காணவில்லை ஒரு ஜோடி கால் தடங்களை
கவலையோடு கண்ணீரோடு மீண்டும் தொடர்ந்தேன்
கண்டேன் நிலம் நீர் காற்று ஆகாயம் நெருப்பில்
பிரபஞ்சத்தில் கண்டேன் என்னில் கண்டேன்
நீதான் நான், நான் தான் நீ
என்பதை உணர்ந்தேன்.
ஒருங்கிணைந்து உயர்வோம் அடைக்கல அன்னையின் மக்களாய்.

சகோ. சுசிலா மேரி (806).

---

# பிரபஞ்சத்தின் பெருங்கொடை

பிரபஞ்சத்தின் தனிமொழி பேரமைதி
பிரபஞ்சத்தின் தனிபாடம் நன்மையை விதைப்பது
பிரபஞ்சத்தின் தனித்திறன் நற்சொல்
பிரபஞ்சத்தின் தனிரகசியம் நற்செயல்
பிரபஞ்சத்தின் தனிப்பண்பு நேர்மறை நினைவு
பிரபஞ்சத்தின் தனிஆசீர் நல் தியானம்

ஆதலால்தான் ஆபிரகாம் ஆழ்மன அமைதியில் ஆண்டவரை தரிசித்தார். அப்படியே பெற்றார் பிரபஞ்ச ஆசீரை. “வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால் விண்மீன்களை எண்ணிப்பார். இவற்றைப் போலவே, உன் வழிமரபினரும் இருப்பர்”. (தொநூ 15:5) எனவே, நாமும் பேரமைதிக்குள் நுழைந்து பெரும் ஆசீரைப் பெறுவோமா?

சகோ. ஜெரால்டு சாந்தி (889).
நடுவைக்குறிச்சி.

# மூலிகை மருத்துவம்

பரந்து விரிந்த நம் பூமியில் இயற்கையாக விளையக் கூடியவை பல. அவற்றில் பெரும்பாலானவை மருத்துவ பயன் கொண்டவை. ஒவ்வொரு மூலிகையும், ஒவ்வொரு நோயை வராமல் தடுக்கவும், வந்தவுடன் குணப்படுத்தவும் கூடிய ஆற்றல் கொண்டவை. அவற்றை நாம் உணவாக உட்கொண்டோமானால் நோயற்ற வாழ்வை வாழலாம்.

**மூளை பலத்திற்கு:**

துளசி தீர்த்தம் மனித மூளைக்கு திண்மை கொடுக்கக்கூடிய அபாரமான மருந்து. துளசி இலையை ஒரு டம்ளர் நீரில் போட்டு ஊற வைத்த அந்தத் தண்ணீரைக் குடித்து வந்தால் மூளை பலம் பெறும்.

**கண் எரிச்சல்:**

கண் எரிச்சலால் பலரும் அவதிப்படலாம். இதற்கு சிறந்த மருந்து கற்பூர வாழைப்பழம். அடிக்கடி கற்பூர வாழைப்பழத்தை சாப்பிட்டு வந்தால் கண்கள் குளிர்ச்சி பெறும்.

**வண்டு கடி:**

எளிதாக கிடைக்கும் பப்பாளி இலையைக் கொண்டு வண்டு கடியை குணப்படுத்தலாம். பப்பாளி இலையை இடித்தால் சாறு கிடைக்கும். இந்த சாற்றை வண்டு கடித்த இடத்தில் கனமாக பூசிவர வேண்டும். இப்படி மூன்று நாட்கள் தொடர்ந்தால் நல்ல பலன் உண்டு.

**தொண்டைப் புண்:**

கொஞ்சம் மிளகைத் தூளாக இடித்துக்கொள்ளுங்கள். இந்தப் பொடியை கொஞ்சம் வெல்லம், அதோடு கொஞ்சம் நெய் போட்டு உருட்டி ஒரு உருண்டையாக்கி விழுங்கினால் தொண்டைப்புண் காணாமல் போகும்.

**அல்சர் குணமாக:**

பச்சை வாழைப்பழத்தை சாப்பிட்டு வந்தால் பழுதுபட்ட மெலிசான சவ்வுத்தோல்களை சீக்கிரமாக வளரச் செய்து புண்ணை ஆற்றி விடுகிறது.

**சகோ. மேரி ஸ்டெல்லா, (1252)**
**நடுவைக்குறிச்சி.**

# BE POSITIVE

**Life's Teacher:** Everyone in your life has come to teach you something.

**Beautiful Manners:** A person of wisdom and spirituality has very beautiful manners that have grown from genuine respect and love for the whole of humanity. Manners in this sense have nothing to do with culture or education; it is simply a question of humility.

**Busy People:** We live in the age of 'busy'. Busy people not only do a lot, they think a lot. Being lost in thought is not only tiring and a brilliant way of waste energy, it's as if we have forgotten the very ground of our being which is still and silent. Learn to meditate and turn the eye of your attention and awareness within, let your mind be quiet and allow your being to be still.

**Season's Greetings:** This is the season of giving; giving peace, happiness, and love to all. But you cannot give what you do not have. Today take time out to give yourself a moment of peace and then you can share it with everyone.

**Count Your Blessings:** Even when you feel as though things aren't going well in your life, you have reasons to be grateful. Today, take the time to appreciate the gift of life and all its wonders. Count your blessings and cherish what you have.

**Radiate Happiness:** Have you ever noticed that happiness is not a dependency, it is a decision? You don't actually need anything to be happy. It's not something that comes from outside, it comes from inside, and when you radiate happy energy you'll be amazed at what it attracts into your life. Don't worry, be happy...sound familiar? Decide now, be happy, and watch the magic begin to enter your life.

**Good Relationships:** In order to create good relationships - with your mind, think about what you have to learn from others; with your eyes, look into good qualities of others; with your words, recognize, value, and appreciate their accomplishments; with your actions, cooperate and do something for others.

**Smile And Say "Hello":** In life, you will meet many people. All are significant. They deserve your attention and care, even if all you do is smile and say "hello".

**Heart Song:** Everyone has a song in their heart. Everyone has a reason for being here and a season for making their highest, most outstanding most auspicious contribution.

**The Power to Discriminate:** Like the trained eye of a jeweller who discriminates the real from the imitation, I can distinguish between what is true and what is false.

# அடைக்கலத்தின் அரவணைப்பு



அடைக்கலத்தில் எமை ஈன்றெடுத்தாய்
ஆரோக்கியமாய் எமை வழிநடத்தினாய்
சகாயமாய் எமக்கு உதவியானாய்
லூர்தன்னையாய் எமக்கு ஊற்றானாய்
பாத்திமாவாய் நீர் கரிசனையானாய்
செபமாலையாய் நீர் வெற்றியானாய்
காணிக்கையாய் எமக்கு அர்ப்பணமானாய்
இறைத்தாயாய் எமக்கு சொந்தமானாய்
பனிமயமாய் நீர் அருளானாய்
கார்மெலாய் நீர் சக்தியானாய்
விண்மீனாய் எமக்கு ஒளியானாய்
ரோஜா மலராய் எமக்கு நல்மணமானாய்
மோட்சராக்கினியாய் நீர் சொர்க்கமானாய்!
தாயே! எம் அடைக்கலமே...
எங்கள் வாழ்வின் அதிசயமே...
வாழ்வாய் வழியாய் ஒளியாய் வாருமே!

குழுமச் சகோதரிகள், ஊட்டி.

---



பிரபஞ்சமே என் பிரபஞ்சமே!
உம்மால் நான் பெற்றுக்கொண்டவை ஏராளம்!
உம்மால் உருவாக்கப்பட்டவள் நான்
நான் தனிமையில் இருந்த போது
சிந்திக்கக் கற்றுக் கொடுத்தாய்
அமைதியாய் இருந்த போது
இறையாற்றலை பெற்றுத்தந்தாய்
துன்பத்தில் இருந்த போது
எனக்கு சிரிக்கக் கற்றுக் கொடுத்தாய்
நான் ஏழை என்று நினைத்த போது
ஏழ்மையைக் கற்றுக் கொடுத்தாய்
தலைகுனிந்து நின்ற போது
என்னை மாண்போடு தலைநிமிர வைத்தாய்
இத்தனையும் கற்றுக்கொடுத்த - உன்னை
நான் மறந்தது ஏனோ!

சகோ. சோபியா (1335),
விளார் மெட்ரிக்.

# BE A................ OUR LADY OF REFUGE

**O - Be an Optimist Person**
**U - Be an Untiring Person**
**R - Be a Radiant Person**
**L - Be a Lustrous Person**
**A - Be an Affable Person**
**D - Be a Divine Person**
**Y - Be a Youngling Person**
**O - Be an Oracle Person**
**F - Be a Flawless Person**
**R - Be a Ravishing Person**
**E - Be an Elegant Person**
**F - Be a Fidelity Person**
**U - Be a Universal Person**
**G - Be a Gaily Person**
**E - Be an Elysian Person.**

**Bon Secours Convent,**
**Ooty.**

---

ஆண்டவனின் அருளால் தோன்றிய வானமே! பூமியே!
ஆகாயத்தில் தோன்றிய உதயமே!
இமயத்தில் தோன்றிய எண்ணில்லா உயிர்களே!
இறைச்சாயலில் தோன்றிய மனிதர்களே!
காற்றிலே பிறந்து உருவான இசையே
மரக்கிளையிடையே நுழைந்து புல்லாங்குழலில் ஒலியானதோ!
விடியற்காலையில் வீசும் இளம் தென்றலே!
மலர்ந்தும் மலராத காலை பொழுதில் நறுமணம் கமழும் மல்லிகையே!
காலை பொழுதில் கூவி பாடித் திரியும் பறவைகளே!
மாலை பொழுதில் கூடு தேடி ஒன்று சேரும் உயிரினமே!
மரம், செடி, கொடிகளைப் பாதுகாப்போம்!
மண் வளத்தையும், மழைத் துளிகளையும் சேகரிப்போம்!
விஞ்ஞானத்தால் கண்டுபிடித்த எண்ணில்லா கருவிகளே!
மனிதனுக்கு இறை ஆற்றல் தந்து இயங்கும் சக்தியே!
வாழ்க பல்லாண்டு பிரபஞ்சங்கள்!
உலகம் உள்ளவரை அதைப் பேணி பாதுகாப்போம்!
பாரினில் என்றும் உம் புகழ் பாடி மகிழ்வோம்,
இறை அழைத்தலில் என்றும் மகிழ்ந்து வாழ்வோம்!

சகோ. சுசிலா (692).

# அடைக்கலமே!
# என் அன்புருவே...



அன்னையே எங்கள் அடைக்கலமே!
அண்டிவந்தோரின் பாதுகாவலே
அல்லல்படுவோரின் அரவணைப்பே
ஆதரவற்றோரின் அன்னையே!
திக்கற்றோரின் திசைவிளக்கே
திரளான மக்களின் மணிமகுடமே
மாணிக்கமே மரகத வீணையே
மண்ணகத்தோரின் மாதரசியே
மண்டியிட்டு வேண்டுவோரின்
நலன்களைப் பூர்த்தி செய்பவளே!
நீர் எம் பக்கம் இருக்க
என்னைப் பகைப்போர் யார்?
என் பக்க துணையாய் நின்று
தரிசனம் தரும் தங்கத் தாய் நீர் அல்லவோ!
உம்மை அண்டி வந்தோரின் வாழ்வில்
ஒளி தீபமாய் சுடர்வீசி
சுதந்திரம் அளிக்கும் தெய்வத்திருமகளே
நின் மகளின் கரம் உந்தனின் திருவடியிலே
கரம் தொட்டு தூக்கி எம்
கரையைப் போக்கி உம் மடியில் வைத்து
தாலாட்டி சீராட்டி காக்கும்
உம் பிள்ளை யான் நின்னை
என்றும் மறவாமல் வாழ்ந்து
நின் தரிசனம் கண்டு
உம் மகனின் அரசுக்கு வந்து சேர
அருள்வாயே எம் அடைக்கலமே
எம் அன்னையே! நீர் வாழ்க!.

குழமச் சகோதரிகள்
ஊட்டி.

# தொலைந்து போன அமைதி

எங்கே அந்த அமைதி ????
ஆழ்கடலின் ஒரு மூலையிலா? ஆலமரத்தின் அடியினிலா?
இமயமலையின் உச்சியிலா? எவரெஸ்ட் சிகரத்தின் சரிவினிலா?
எங்கே அந்த அமைதி ????
இல்லறம் பூண்டு நல்லறம் பேணும் மானிடர் தேடும் அமைதி
இல்லறம் துறந்து துறவறம் ஏற்ற துறவி தேடும் அமைதி
செல்வச் செழிப்பில் சீறுடன் வாழும் செல்வந்தன் தேடும் அமைதி
அனுதின உணவுக்கு அடுத்திருப்பவரை எதிர்பார்த்திருக்கும் ஆண்டி தேடும் அமைதி
கவலை அறியா மழலை விரும்பும் அமைதி
கணினி முன் உலகை கையாளும் இளைஞன் விரும்பும் அமைதி
காவியம் பாடும் புலவன் தேடும் அமைதி.
அமைதியே! உலகமே விரும்பும் உன்னை, உச்சரிக்கும் போதே மகிழ்ச்சி
உணர்வுகள் கடந்து உள்ளத்தில் ஓர் கிளர்ச்சி
அனைவரும் விரும்பும் உன்னை அடைவதுதான் எப்படி?
கண்களில் தோன்றும் கானல் நீரா நீ?
கைகளில் சிக்காத காற்று வெளியா நீ?
கானக் குயிலின் ஓசையில் எழுவதா நீ?
கண்களை மூடியதும் காணும் இறை ஒளியா நீ?
யார் நீ? எங்கே இருக்கிறாய்?
இறைபதம் அமர்ந்து இருவிழி மூடி உன்னைத் தேடவா?
அறச் செயல் புரிந்து அடுத்தவரில் உன்னைக் காணவா?
மனதினை ஒடுக்கி மகிழ்ச்சியில் உன்னைக் காணவா?
அன்பு செய்து ஆறுதல் கூறி உன்னை அடையவா?
ஒரு வழியாக முடிவுக்கு வருகிறேன்
பொன்னிலும் பொருளிலும் இல்லை நீ
புகழ்ச்சியிலும் இகழ்ச்சியிலும் இல்லை நீ
பணத்திலும் பதவியிலும் இல்லை நீ
கடந்ததை மறந்து வருவதை நினையாது
நிகழ் காலத்தில் நிம்மதியாய் வாழும் போது
நீ என் சொந்தமாகிறாய்
அமைதியை அள்ளித் தருகிறாய்.

**சகோ. ஆரோக்கிய டெரன்சி (1453),**
**தலைமையகம்.**

# பிரபஞ்சத்தின் பேரன்பு

**"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்."  - என்கிறார் வள்ளுவர்.**

உலகத்தின் எல்லாப் படைப்புகளும் ஐம்பூதங்களை அடிப்படையாகக் கொண்டது. இதனை அறியாத மனிதன் வஞ்ச மனம் கொண்டு வாழும் போது ஐம்பூதங்களும் சிரித்துக்கொள்ளும் என்பதே இதன் கருத்து.

**இயற்கையின் பேரன்பு:**

அன்பின் எல்லையில் தோன்றும் ஆறறிவிற்கு குறைந்த அ்.றிணை உயிர்கள் அனைத்தையும் தன்னைப் போல் நேசித்தார், அன்பு காட்டினார் - புனித பிரான்சிஸ் அசிசியார். அன்பின் எல்லையில் தோன்றும் அருளினை உணர்வோம். ஆம் சங்ககால தமிழ் மக்கள் கூட ஆறறிவிற்கு குறைந்த அ்.றிணையையும் தன்னைப்போல நினைத்து அருள் செய்தனர்.

இயற்கையோடு கை கோர்த்து வாழ்ந்த வாழ்வே பழந்தமிழரின் வாழ்வாகும். இயற்கையின் பின்னணியில் எழுந்தனவே சங்கப்பாடல்கள்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் நம் முன்னோர்கள். அன்புடன் நடத்தல் என்பது அன்றாட ஒழுக்கமாகும். உன்னை நோக்கி அன்பில் நடந்து வந்தவர்களைப் போன்று உலகின் மாந்தர்களும் அன்பில் நடக்கிறார்கள்.

**ஆர்வமிக்க மனது**
**தயவார்ந்த செயல்**
**அன்பார்ந்த பார்வை**
**சிறு புன்சிரிப்பு**
**எளிய பரிசளிப்பு**

ஆகியவை அன்புடன் ஒழுகுவதன் பிரிவுகளே. ஆதி மனிதர்கள் தமது வாழ்க்கைக்கு நன்மை புரியும் இயற்கையையும், பஞ்ச பூதங்களையும் அரவணைத்து வாழ்ந்தார்கள். இன்றைய மனிதன் பஞ்ச பூதங்களோடு முட்டி மோதி தனது விஞ்ஞான வளர்ச்சியினால் இயற்கையை மாற்றி அமைக்க முனைகிறான். தனது தொழில் நுட்ப வளர்ச்சியால் இயற்கையைப் பல மடங்கு மாசடையச் செய்து செயற்கையாக மழையை பெய்விக்க முயல்கிறான்.

**இஸ்ரேல் கடல் நீரை நன்னீராக்குகிறது.**
**சவுதி அரேபியா கடல் நீரில் பயிர் செய்கிறது.**
**ஜப்பான் மனம்நெகிழும் தொடர் மாடிகளை உருவாக்குகிறது.**

இவ்வாறு அறிவியல் வளர்ந்தாலும் கூட இயற்கையை கட்டுப்படுத்தும் ஆற்றல் மனிதனுக்கு இல்லை. இதனை உணராது பஞ்ச பூதங்களை மாசுபடுத்துகிறான். பிரபஞ்சம் நம்மை காப்பது போல நாமும் பிரபஞ்சத்தைக் காக்க வேண்டிய சூழலில் நாம் இருக்கிறோம். நாளைய உலகிற்கு நாம் விட்டுச்செல்லும் பிரபஞ்ச சக்தி என்ன? **பேரன்பு** என்ற சொத்துதான் பிரபஞ்சத்தின் சக்தியாகும். பிரபஞ்சம் இந்த உலகை தாங்கிப் பிடிப்பது போல, பேரன்பை அள்ளித் தருவது போல நாமும் பிரபஞ்சத்துக்கு செய்யும் நன்மைதான்

பிரபஞ்ச பேரன்பாகும். அதே பேரன்பை சொல் பொருள் மாறாமல் இவ்வுலகில் நம்மோடு பயணிக்கும் உயிர்களோடு பகிர்வோம். பிறர் வாழ தம்மையே கையளிக்கும் பிரபஞ்சத்திடம் நம்மையும் ஒப்படைப்போம்.

**நிலம்:**

நிலத்தின் சிறந்த முதலீடு நிலம்தான் என்றொரு சொல்லாடல் உண்டு. நிலம் நம் நலம் காக்கவே நிலத்தில் நாம் படுத்துகிடந்தால் அது நமக்கு படுக்கையாகிறது. எழுந்து நடந்தால் அது நமக்குப் பாதையாகிறது. பிறரை தாங்கத் தன்னையே இழக்கிறது நிலம். அது போல நம்மைத் தேடி வருவோரை நம் பேரன்பால் தாங்கிப் பிடிப்பதும் வழிகாட்டுவதும்தான் நம் வாழ்வென்னும் நிலத்திற்குச் செய்யும் முதலீடு ஆகும்.

**நீர்:**

**விசும்பின் துளிவிழீன் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண் அரிது. -என்கிறார் வள்ளுவர்.**

விண்ணின் மழைத் துளி மண்ணின் பசும்புல்லுக்கு உயிர் துளியாகிறது. ஆறு தன்னிடம் உள்ள நீரைத் தானே உறிஞ்சிக்கொள்வதில்லை. தன்னலம் இல்லாது பாயும் நீரைப் போல நம் அன்பும் தன்னலம் துறந்த அன்பாக இருக்க வேண்டும்.

**காற்று:**

காற்றை புயல் என்று நினைத்தால் அது புயலாகவேத்தான் தோன்றும். அதனைத் தென்றலென அணுகும்போது தன்னை உருமாற்றி உயிர் மூச்சாகிறது. பிறரை நோக்கிய நமது செயல்கள் புயலாகவும் தென்றலாகவும் இருப்பது நம் கையில் உள்ளது.

**நெருப்பு:**

பிறரை ஒளிர்விக்க தன்னையே எரித்துக்கொள்கிறது. சாதி மத பேதங்களை தீயிலிட்டு எரித்து நல்ல எண்ணம் என்னும் ஒளியினால் நம்மையே ஒளிர்வித்துக் கொள்வோம்.

**ஆகாயம்:**

ஆதிகாலத்திலிருந்து மனிதன் ஏதாவது ஒரு சாதனையைச் செய்து முடித்தவுடன் ஆகாயத்தை அண்ணாந்து பார்ப்பதை வழக்கமாக வைத்துள்ளான். ஆகாயத்தை நோக்கி நன்றி சொல்பவனையும் சரி, ஆகாயத்தை நோக்கி ஆராய்ச்சி செய்பவனையும் சரி அவனை அழிக்காமல் பாரபட்சமின்றி பாதுகாக்கிறது. அகன்ற வானம் போல விரிந்த மனம் கொண்டு பாரபட்சமின்றி நம் வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொள்வோம்.

இவ்வாறாகப் பிரபஞ்ச சக்தி அனைத்தும் பிறரை, நம்மை வாழ வைக்க உதவுவது போல நாமும் இயற்கையிடமிருந்து கற்றுக்கொண்டு எதைச் செய்தாலும், சிந்தித்தாலும் பேசினாலும் பிறரின் நலன் கருதி, குழுமத்தின் நலன் கருதி, சமுதாய நலன் கருதி வாழ முயற்சிப்போம். பிரபஞ்ச சக்தியை அதன் தன்மை மாறாமல் பிறரோடு பகிர்வோம். பிறபஞ்ச சக்தியை நமதாக்குவோம். சலனமில்லாமல் பிறபஞ்சத்தோடு இணைவோம்.

**அழகான உலகம் அசைந்தாடும் உயிர்கள்**
**அன்பில் விளைந்த கனிகள்**
**அகலான இதயம் சுடரான வாழ்வு**
**தெய்வம் உந்தன் இல்லம்**
**பிரபஞ்ச சக்தியில்,**

**நடுவட்டம் இல்லச் சகோதரிகள்.**

# பிரபஞ்சம்!



பூத்துக் குலுங்கும் மலர்களே!
காய்ந்து கனியும் பழங்களே!
குளிர்ந்து வீசும் தென்றல்களே!
பாடித் திரியும் பறவைகளே!

துள்ளிக் குதிக்கும் மீன்களே!
ஊர்ந்து செல்லும் உயிரினமே!
ஓடி விளையாடும் பூச்சிகளே!
வாழ்க! வாழ்க!

பிரபஞ்சத்தின் ஒளிக்கீற்றுகளே!
நின்புகழ் ஓங்குக.
எண்ணி மகிழ்கின்றோம்!
உம் பேராற்றல் மிகவும் அளவிடக்கரியது.

எதிர்பார்க்காமல் உம் அன்பைத் தருகிறாய்.
பிரபஞ்சமே நீ இல்லை என்றால்
எமக்கு வாழ்வு இல்லை. வளம் இல்லை.
ஏன் உயிர் கூட இல்லை.

ஓ! பிரபஞ்சமே!
நீ போடும் பிச்சைதான் என் உயிர்.
உன்னில் இறைவனைக் கண்டு அவரோடு இணைந்து!
துறவற வாழ்வை அர்த்தமுள்ள வகையில் வாழ பணிசெய்ய அருள்தாரும்.

**சகோ. கிருபா மேரி (1214).**

---

இயற்கையோடு பின்னிப் பிணைந்த நமது வாழ்வின் தொடக்கம்
பூமித்தாயின் முத்தத்தின் சத்தத்தோடு எனது குரலொலிக்க
இயற்கை தனது இலைதழைகளோடு கரம் தட்டி என்னை வரவேற்றது
நன்சையும், புன்சையும் கொஞ்சித் தவழும்
இயற்கையின் அழகினை ரசித்து அதனை வாழ்வாக்கிட
இயற்கை தழுவிக்கொண்ட அண்டத்தின் சொந்தங்கள் நாம்.
ஐம்பூதங்களால் இயற்கையினை அரவணைத்த இயற்கைத் தாயே!
என் தாயின் ஐந்தாம் முத்தாய் இவ்வுலகைக் காண வைத்தாய்
இயற்கை சகோதரமே! உன்னை அழிக்கும் போது நீ
மீண்டும் மலர்ந்து வந்தாய் மனிதர்களான எம்மைக் காண
உமது பேரன்பே எம் வாழ்வின் தொடர்பயணம்...

**சகோ. யமுனா மேரி (1407),**
**தச்சன்குறிச்சி.**

பிரபஞ்ச பேரன்பில் ஒருங்கிணைந்து வழி நடக்க
என்னை மாமண்டூரிலிருந்து அழைத்து வந்தாயே
நான் இயற்கையோடு இருக்கிறேன் என்பதை
நீ மறந்துவிட்டாயோ!
நிலமே, நீரே, காற்றே, ஆகாயமே, நெருப்பே,
என்னை உன் நண்பனாக்கிக் கொண்டதற்கு பூரிப்படைகிறேன்!
நான் நிலத்தில் நடக்கும் போது
நிலமே! என்ன அழகு
நான் நீரை குடிக்கும் போது
நீரே! என்ன சுவை
நான் காற்றை சுவாசிக்கும் போது
காற்றே! என்ன மனம்
நான் ஆகாயத்தைப் பார்க்கும் போது
ஆகாயமே! எத்தனை வியப்பு
நான் நெருப்பைப் பார்க்கும் போது
நெருப்பே! எத்தனை சக்தி



ஆம்! பிரபஞ்சக் குருவே! நானும் உம்மைப் போல
சுவை, மனம், வியப்பு, சக்தி உள்ள
சகோதரியாக வாழ எனக்கு
அனுமதி தருவாயா!

சகோ. ஆரோக்கிய நிர்மலா (1380),
காது கேளாதோர் பள்ளி இல்லம், மாமண்டூர்.

---

# கண்ணை மூடினேன் உன்னைத் தேடினேன்...


கண்ணை மூடி இறைவா! உன்னை நினைக்கும் போது
நாங்கள் செய்ய வேண்டிய வேலையே நினைவுக்கு வருகிறது..
கண்ணை மூடி இறைவா! உன்னை நினைக்கும் போது
எங்கள் கவலைகளே நினைவுக்கு வருகிறது.....
கண்ணை மூடி இறைவா! உன்னை நினைக்கும் போது
எங்களுக்கு தீமை செய்தவர்களின் முகம் நினைவுக்கு வருகிறது.....
கண்ணை மூடி இறைவா! உன்னை நினைக்கும் போது
இந்த சமூகத்தில் நடக்கும் அநீதிகளே நினைவுக்கு வருகிறது.....
இன்று நான் கண்ணை மூடி இறைவா! உன்னை நினைக்கும் போது
என் மனக்கண்ணால் இயற்கையின் பேரன்பை உணர்ந்திடுவேன்....
நன்றி இறைவா! நன்றி இறைவா!
நீர் கொடுத்த இந்தப் பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைந்து வழிநடக்க......
என் தேடலை தொடங்குகின்றேன் உன் பேரன்பில்......

சகோ. சுகந்தி (1352).


# பிரபஞ்சப் பேரன்பே!

அகிலத்தை ஆண்டு வழிநடத்தும்
அன்புப் பிரபஞ்சப் பேரன்பே!
இறைவன் படைத்த முதல் படைப்புகளே
உம்மை வணங்குகிறேன்! வாழ்த்துகிறேன்!
இறைவன் படைத்த முதல் படைப்புகளே
உம்மை வணங்குகிறேன்! வாழ்த்துகிறேன்!
தாயின் கருவில் என்னைக் கருவாக
உருவமைத்து உமது பிரபஞ்சப் பேரன்பால்
என் வாழ்வை எனக்குக் கொடையாகக் கொடுத்தீர்
சிறிய குழந்தை முதலே நீர் உமது
பிரபஞ்சப் பேரன்பால் எனக்கு நன்மை பல புரிந்தீர்
என்னே உமது பேரன்பு! என்னே உமது பேரன்பு!
2004 -இல் அடைக்கலமே உருவான எம் அடைக்கல சபையில்
ஒரு அங்கத்தினராய் என்னை அரவணைத்தீர்
2010 -இல் அர்ப்பணம் என்ற இறை போர்வைக்குள்
சிறந்த அருட்சகோதரியாக என்னை உருவாக்கினீர்
உமது பிரபஞ்சக் குடும்பத்தைப் போல ஒருங்கிணைந்து
எம் சகோதரிகளோடு குழும வாழ்வில் இணைய
எனக்கு வாய்ப்புகள் பல நல்கினீர்
என் வாழ்வில் துன்பங்கள் வெப்பம் போல
சூழ்கின்ற போது சில்லென பெய்கின்ற
மழையைப் போல பெய்து எம் மனதைக் குளிரவைத்து,
சிறப்பாக வழிநடத்துகின்ற எமது பிரபஞ்சமே!
உமக்கு நன்றி! நன்றி! நன்றி!
என்று கூறி இந்த சிறிய கவிதையை உமக்கே படைக்கிறேன்

**சகோ. சகாய ஜீலி (1396),**
**விச்சூர்.**



# ஓ! பிரபஞ்சமே!



ஓ பிரபஞ்சமே....
ஒளிக்கீற்றாய் உலகில் உதித்தாய்...
பேரன்பின் பெரு ஊற்றாய் - அந்த
மிகப்பெரியவனும் எனை உருவாக்கி
உன்னில் என்னை இணைத்தான்.
எல்லா நேரமும் என்னோடு நடக்கின்றாய்
எல்லா இடங்களிலும் துணையென வருகின்றாய்
கடலாய் வந்து தாகம் தணிக்கின்றாய்
பறவையாய் கீதம் இசைக்கின்றாய்
காற்றாய் நீ உயிர் தருகின்றாய்
பச்சிளம் குழந்தை போல் பார்த்து ரசிக்கின்றாய்
மல்லிகைப் பூவாய் மணம் பரப்புகின்றாய்
உடன் வாழும் சகோதரியாய் உறவாடுகின்றாய்
நீ இத்தனையும் செய்தும்
உனை நினைக்க மறந்தேன் - நான்
ஊதாரியாய் இருந்த போதிலும்
எனை அணைத்துக் கொண்டாய்!
பேரன்பின் தந்தையென
பெரு மதிப்புக் கொடுத்து அணைத்து ஆறுதல்படுத்தினாய்
உன் அன்பை என்னென்பேன்! ஓ பிரபஞ்சமே....

சகோ. அமலோற்பவ மேரி (1377).

---

# ஓ! பிரபஞ்சமே! ஓ! பிரபஞ்சமே!



ஓ பிரபஞ்சமே! ஓ பிரபஞ்சமே!
வெப்பத்தைத் தர சூரியனாய் உதயமானாய்!
குளுமையைத் தர நிலவாய் தோன்றினாய்!
பூமியைக் குளிர்விக்க மழையாய் வந்தாய்!
மழையை வரவேற்க இடியாய் முழங்கினாய்!
காற்றைத் தர ஆகாயமாய் அசைந்தாய்!
நிழலைத் தர மரமாய் வளர்ந்தாய்!
விளைச்சலைத் தர விதையாய் புதைந்தாய்! - அதன்
விளைவைத் தர பூமியிலே விருட்சமானாய்!
இதுதான் படைப்புகளின் விந்தை. மிகவும் விசித்திரமானது!
அடடா! என்னே! ஆண்டவனின் படைப்பு!
அவனின் தனிக் கருணை!
ஓ பிரபஞ்சமே! ஓ பிரபஞ்சமே!
என்னையும் உன்னோடு இணைத்துக் கொள்வாயா!

சகோ. பவுலின் சகாய ரோஸ்லின் (1322).

# அன்னையின் அடைக்கலத்தில்...

அன்புக் கரம் நீட்டி அகிலத்தை அரவணைத்தாய்
ஆம் என்ற வார்த்தையால் ஆண்டவனுக்குத் தாயானாய்
இனிய வார்த்தையால் இல்லாதவர்க்கு சொந்தமானாய்
ஈடிணையில்லா தாழ்ச்சியால் எம்மவர்க்கு எடுத்துக்காட்டானாய்
உற்சாக பேச்சினால் உடைந்தோர்க்கு உயிர் கொடுத்தாய்
ஊர் கடந்துசென்று உறவுகளுக்கு உற்றத் துணையானாய்
எளிமையான வாழ்வினால் நிறைவை நோக்கி வழிநடத்தினாய்
ஏற்றம் இரக்கம் இரண்டிலும் எம்முடன் இருந்தாய்
ஐயம் அகற்றி இறைநம்பிக்கையை ஊட்டினாய்
ஒற்றுமை என்ற குடையில் உலகினைச் சேர்த்தாய்
ஓரங்கட்டப்பட்ட மக்களுக்காக உரிமைக்குரல் கொடுத்தாய்
ஔடத வழியில் எம்மை வழிநடத்திடுவாய் அம்மா...
உமது அடைக்கலத்தை நாடும் அடைக்கலாங் குருவிகளாய் நாங்கள்......

சகோ. நேச பிரதீபா (1506),
தலைமையகம்.

---

# என் அன்னை நீயே!



அம்மா மரியே!
என் அன்னையால் அன்னை
என சுட்டி காட்டப்பட்டவள் நீ!
அன்பினால் அரவணைத்தாய்
ஆறுதலால் வழிநடத்தினாய்
இனிமையாய் உறவாடினாய்
ஈதலால் என்னை வளர்த்தாய்
உதவி செய்யத் தூண்டினாய்
ஊர் போற்றும் பிள்ளையாக்கினாய்
என் தாயாய் நீயானாய் - எனை
இயேசுவிடம் கொண்டு வந்தாய்
ஒரு சொல்லால் அர்ப்பணமாக்கினாய்
ஓய்வு இல்லாமல் உழைக்க வைத்தாய்
ஔடதமான உன் அழகைக் காண வந்தேன்
அஃது நீ இல்லாமல் நான் என்ன செய்வேன்.

சகோ. அருள் பாரதி (1437)
தலைமையகம்.

# அன்னைக்கு நன்றி...

கதிரவனிலிருந்து புறப்படும் கதிராய்
மலரிலிருந்து எழும் மணமாய்
புயலிலிருந்து உருவான கருவாய் எம் சபையை உருவாக்கினாய் நன்றி..

கருவுக்கு உருகொடுத்து
அனாதைகளுக்கு அடைக்கலம் கொடுக்க
அனாதைகளால் மடம் அமைத்தாய் நன்றி...

இயேசுவின் இறையரசைப் பரப்ப
பெண்மையின் மேன்மையை உணர்த்த
ஏழு சகோதரிகளால் சபையைப் பெற்றெடுத்தாய் நன்றி.....

காரிருள் சூழ்ந்தபோதும்
வறுமை வாட்டிய போதும்
நம்பிக்கை ஒளிகொண்டு தாலாட்டினாய் நன்றி....

எண்ணங்களை செயலாக்க
அடைக்கலப்பணியை அனைவருக்கும் செய்ய
விடுதலைக் காற்றைச் சுவாசிக்க மயிலைக்கு அழைத்து வந்தாய் நன்றி....

இன்னல்கள் இடையிட்ட போதும்
நோய்கள் தாக்கிய போதும்
தடைகளைத் தாண்டி தத்தித்தத்தி நடக்க வைத்தாய் நன்றி...

நங்கைக்கு நகையிட்டு மகிழ்வது போல
எம் சபைக்கு அணிகளனாக
பல பணிகளைக் கொடுத்து அழகு செய்தாய் நன்றி...

புறத்திலிருக்கும் பொருளை விடுத்து
அகத்திலிருக்கும் இறைவனை அறிந்துகொள்ள
ஆன்மா என்னும் ஒளியைக் கண்டடைய
ஆதாரமாய் வந்து நின்றாய் நன்றி...

பரமனின் பாசத்தை படைப்பில் காண
பிரபஞ்சப் பேரன்பில் ஒன்றிணைய முனைந்திருக்கும் எங்களை
கரம் நீட்டி காக்கும் அடைக்கலத்தாயே நன்றி!

சகோ. நேச பிரதீபா (1506)
தலைமையகம்

# மரியன்னை என்னும் தீபம்

மரியன்னை என்னும் தீபம்
உலகில் சுடர்விட்டு எரிவதால்தான்
பாசம் என்னும் ஒளி
இன்னமும் மின்னி வருகிறது - ஆம்

ஆகட்டும் உம் வார்த்தையே
என்று பணிந்தவள் நீயே!
படைத்த இறைவனுக்கே
உரு கொடுத்து உயிர் தந்தாயே!

இறைவன் தேர்ந்த சேயும் நீயே - அந்த
இறைமகனை ஈன்ற தாயும் நீயே!
மழையென அன்பை நீ பொழிந்தாயே
மலர் பூத்திடும் அழகின் முழுமையும் நீயே!

தாய் என்ற சொல்லின் அர்த்தம் நீயே!
எனை ஈன்ற தாயின் தாயும் நீயே!
எனைக் காக்க உம் மகன் நீ தந்தாயே!
உனை மறவேன் என்றும் உம் சேயே!

உதரத்தில் இறைமகனைச் சுமந்தாயே - இறுதியில்
உதிரத்தோடே மடியினில் ஏந்தினாயே!
கருணைக் கடலே என் மரியே!
மாய்ந்த மகனைக் கண்டு மனம் கலங்கினாயே!

ஆதித்தாய் ஏவாளின் பாவத்தில் பிறந்தோமே - அந்த
பாவத்தை கொன்று வென்றவளே - எம்
தாய்மரியே இரண்டாம் ஏவாளே!
உம்மைப் போல் தூய்மை - எம்
உள்ளத்திற்கு தந்திடுவாய் - எம்
தாயே! மரியே! அடைக்கல அன்னையே!

சகோ. ஆரோக்கிய அருள் ஜோதி (1435)
அரண்வாயல் குப்பம்.

# அம்மா! மரியே!



நவீன் என்ற இளைஞனின் தந்தை இறந்ததால் அவனுடைய தாய் அவனை அரச அவைக்கு அனுப்பிவைத்தாள். வழியனுப்புகையில் மாதாவின் மீது மிக்க பற்றும் பக்தியும் கொண்ட அத்தாய் தன் மகனிடம் நாள்தோறும் "அருள் நிறைந்த" மந்திரத்தையும் அதன் முடிவில் "ஓ மிகவும் பரிசுத்த கன்னிகையே என்னுடைய மரண நேரத்தில் எனக்குதவும்" என்று செபிக்க வாக்குறுதி வாங்கினாள்.

சிறிது நாளில் நெறி தவறிய அவ்விளைஞன் அரசனால் பணிநீக்கம் செய்யப்பட்டான். வயிற்றுப் பிழைப்புக்கு வழியின்றி களவு, கொலை முதலிய குற்றங்களில் ஈடுபட்டான். இருப்பினும் தன் தாய்க்கு கொடுத்த வாக்குறுதியை மறவாமல் தேவதாய் மீது நம்பிக்கையுடன் அச்செபங்களைச் சொல்லி வந்தான். இறுதியில் அவன் பிடிபட்டு மரண தண்டனை பெற்று சிறையிலடைக்கப்பட்டான்.

தூக்கிலிடப்படுவதற்கு முந்தின நாள் தாயின் துயரை எண்ணி பார்த்தான். தனக்கு நேரிடப் போகும் சாவை பற்றி எண்ணி மனம் சோர்ந்தான். அவன் மனநிலை அறிந்த பசாசு அழகிய இளைஞன் உருவில் அவனிடம் வந்து நீ நான் சொல்கிறபடி நடந்தால் உனக்கு விடுதலைப் பெற்றுத் தர என்னால் முடியும் என்றது. நவீனும் விருப்புடன் அவன் சொல்வதன்படி நடப்பதாக வாக்குக் கொடுத்தான்.

அவ்விளைஞன் அப்போது தான் பசாசு என்றும் அவனைக் காப்பாற்ற வந்திருப்பதாகவும் கூறியது. இயேசு கிறிஸ்துவையும் தேவதிரவிய அனுமானங்களையும் மறுதலிக்குமாறு முதலில் கேட்டது. அவனும் ஒத்துக் கொண்டான். பின்பு தேவ மாதாவின் பக்தியையும் அவர்களுடைய பாதுகாவலையும் துறந்துவிடக் கேட்டது பசாசு. அதற்கு நவீன் மறுத்ததுமன்றி, அவன் சொல்லும் வழக்கமான செபத்தை உரத்தக் குரலில் சொன்னான் உடனே பசாசு ஓடியது. இயேசுவை மறுதலித்ததற்காக மனம் வருந்தினான்.

அடுத்த நாள் தூக்கு மேடைக்கு அவனை அழைத்துச் சென்றனர். வழியில் மாதா சுரூபம் ஒன்றிருந்ததைக் கண்டு அருகில் சென்று முத்தி செய்ய அனுமதி கேட்டான். அனுமதி மறுக்கப்பட்டது. மீண்டும் உரத்த குரலில் செபிக்கத் தொடங்கினான் நவீன். உருகிய மனம் அன்னையின் இரக்க உணர்வை துண்டியது. அவன் அன்னையின் பாதத்தை முத்தி செய்ய குனிந்த போது அத்தாயின் கரம் நவீனை இறுகப் பற்றிக் கொண்டது. யாராலும் அவனை விடுவிக்க முடியவில்லை.

இரக்கம், மன்னிப்பு, விடுதலை என எழுந்த மக்கள் கூட்டத்தின் குரல் வெற்றி கொண்டது. செபத்தின் வல்லமையால் அவன் விடுவிக்கப்பட்டான். ஊர் திரும்பி தன்னை இவ்வுலக சாவினின்று காப்பாற்றிய அன்னையின் பக்தியில் சிறந்து விளங்கினான்.

ஜெபமே ஜெயம்!

**சகோ. அக்ஸிலியா (1503),**
**தலைமையகம்.**

# அன்னையின் அடைக்கலத்தில்...

அருள் மிகுந்த கன்னியாக விளங்குகின்ற
அடியோரின் அடைக்கலமாம் எம் அடைக்கலத்தாயே!
அன்பு நிறை உம்கருணை நினைத்திட்டே
அன்பரும்மை வணங்குகிறோம் அன்னையே!
அனைவரும் உமை வணங்க
அடியோர் யாம் ஆசிக்கிறோம்
அன்புள்ளத் தாயே!
அனைவருக்கும் அடைக்கலம் தரும்
இயேசுவின் நற்கருணைப் பேழையே!
வணங்குகிறோம் யாம் உம்மையே
அரவணைப்பாய் எம் அடைக்கலத்தாயே!

**சகோ. அக்ஸிலியா (1503),**
**தலைமையகம்.**

---

# என் எல்லாமே நீயே!

மனுகுல மீட்பின் வரலாற்றில் இறைவனின் தாயாகவும், பெண்களுக்குள் பேறுபெற்றவளாகவும், பன்னிரு வின்மீண்களை அணிந்தவராகவும் இருப்பவள் தான் நம் அன்னை மரியாள். நாளும்பொழுதும் எந்நேரமும் எக்காலத்திலும் எங்கெங்கிலும் அவளை நோக்கிச் செல்லும் அவர்தம் பிள்ளைகளுக்கு குறையை நீக்கி நலம் தரும் அன்னையாய் இருக்கிறாள்.

நம் அன்னையவள் வாழ்வு என்னும் பயணத்தில் தடுமாறி விழுவோரை நிலமாய் இருந்து தாங்கிப் பிடிக்கிறாள். தாகத்தால் தவிப்போருக்கு வற்றாத நீருற்றாய் இருக்கிறாள். தென்றலாய், காற்றாய் இருந்து சுவாசத்தோடு கலந்திருக்கிறாள். ஆகாயமாய் இருந்து அல்லும் பகலும் அரவணைப்பவள். அன்றாடம் வருகின்ற இன்னல்களையும் இக்கட்டுகளையும் சூரியனாய் இருந்து சுட்டெரிப்பவள். பிரபஞ்சங்களின் ஆற்றலையும் சக்தியையும் பெற்றுள்ள நம் அன்னையை படைப்புகளோடு இணைந்து புகழ்வோம்.

மழையே! பனியே! அன்னையை வாழ்த்துங்கள்!
இரவே! பகலே! நீங்களெல்லாம் அன்னையை வாழ்த்துங்கள்!
மண்ணுலகே! நிலத்தில் தளிர்ப்பவையே! அன்னையை வாழ்த்துங்கள்!
காற்றுவகைகளே! தென்றலே! நீங்களெல்லாம் அன்னையை வாழ்த்துங்கள்!
நெருப்பே! வெப்பமே! அன்னையை வாழ்த்துங்கள்!
கடல்களே! ஆறுகளே! நீருற்றுகளே! அன்னையை வாழ்த்துங்கள்!
ஏனெனில் என்றென்றும் உள்ளது அன்னையின் பேரன்பு!

அன்னையைப் புகழ்வோம்!!! அளவில்லாத ஆசீரைப் பெறுவோம்!!!

சகோ. ரெபேக்கா (1464),
தலைமையகம்.

# அன்புக்கு இனியவள்!

அம்மா! அம்மா என்ற சொல்லில் அனைத்தும் அடங்கிவிடும். இதில் எங்ஙனம் நான் நம் அன்னையை பற்றி விளக்கி கூற. நம் அன்பு இயேசு நமக்குக் கொடுத்த உயர்ந்த பரிசுதான் நம் அன்னை மரியா!

அவள் மலராய் மணப்பவள்
தேனாய் இனிப்பவள்
தென்றலாய் தொடுபவள்
நிலவாய் குளிர்பவள்
நிழலாய் வாழ்பவள்
நிம்மதியாய் வருபவள்
கருணையில் அவள் கண்கள்
ஒன்று சிந்து
மற்றொன்று கங்கை
அவள் பெயர் சொன்னால்
எங்கும் அருள் மணக்கும்
எட்டுத்திக்கும் புகழ் மணக்கும்
அவளின் அழகுக்கு ஈடில்லை
ஊர், பார் போற்றும் பேரழகி
அவள் ஒரு தேவதை
அவளின் முகம் பூ போன்றது
அவளின் மனம் அது பொன் போன்றது
பூ போன்றது பொங்கி வரும்
அலைப் போன்றது
இறைவனின் வார்த்தைக்கு முற்றிலும் பணிந்து
தன் இதயத்திலும் உதரத்திலும்
இறைவனின் பேரன்பை சொந்தமாக்கி கொண்டவள்
அவள் கடந்ததை நினைத்து
கலங்கி நிற்பவர்க்கு
காலத்தைக் காட்டும்
கலங்கரை தீபம்
நம்மோடு இணைந்து பயணிக்கும்
அற்புத நாயகி அவள்
நம் தேவையில் தம் மகனிடம் பரிந்து பேசும்
அன்புத் தாய் அவள்
அவளின் அன்புக்கு ஈடில்லை
அவளின் அன்பு தேனினும் இனியது
அனைவரும் அவள் அன்பில் மகிழ்ந்து
அவள் வழி ஆண்டவரோடு இணைவோம்...

சகோ. பபிய ஷீலா (1454),
தலைமையகம்.

# அடைக்கல அன்னை!

பாருலகை பராமரிக்க பரமனை ஈன்ற அன்னையே!
பரமனுக்கு மட்டும் நீ தாயல்ல?
பாரில் உள்ளோர் அனைவருக்கும் அன்னை நீயே!!

உலகமே வியந்து நிற்கும் அன்னை என்ற வார்த்தைக்கு ஏற்ப அன்னையின் பிறப்பு அவனிக்கு சிறப்பு, அன்னையின் உள்ளம் அன்பின் வெள்ளம், அன்னையின் பணிவு நீதியின் துணிவு, அன்னையின் எளிமை வாழ்வின் தூய்மை, அன்னையின் அடைக்கலம் நம் வாழ்வின் படைக்கலம். அடைக்கல அன்னையை வாழ்வின் அடைக்கலமாகவும் படைக்கலமாகவும் கொண்டு வாழும் அடைக்கல அன்னை சபையோராகிய நம் அனைவருக்கும் அவள் தாய் என்பதால் நம்மீது அவள் கொண்டுள்ள அன்பு எத்துணை மேலானது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். அடைக்கல அன்னை நம் அனைவரின் அன்புத் தாய், அண்டி வந்தோரை அரவணைக்கும் தாய் அன்பை தன் பாசத்தாலும், பண்பை தன் பரிவாலும், எளிமையை தன் வாழ்க்கையாலும் வாழ்ந்து காட்டிய நம் அடைக்கல அன்னையின் பிறப்பு மாண்பு மிக்க தெய்வ செயல். திருத்தந்தை பிரான்சிஸ் **'அன்னை மரியாவைத் தன் தாயாக ஏற்றுகொள்ளாத கிறிஸ்தவர் ஒரு அனாதைக்கு ஒப்பாவர்'** என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் **'ஆழம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகள் இருந்து என்ன பயன்? எனக்கு அம்மாவென நீ இருந்தாய் அதனால் விழுந்திடாது நான் இருந்தேன்'** என்று கவிஞன் ஒருவன் அன்னையை பெருமைப்படுத்துகின்றான். மண்ணில் ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அது அன்னைக்கு ஈடாகாது என்பது உண்மை. எனவே அன்பை விதைப்போம் அவனியில்! அன்னையின் அடிச்சுவட்டை பின்பற்றுவோம் நம் வாழ்வில்!.




மரியே வாழ்க!!

**சகோ. ஆரோக்கிய வென்சி (1504),**
**தலைமையகம்.**

# பிரபஞ்சமே! ஆஹா!

பிரபஞ்சமே!
நீ பிறரின் பஞ்சம் தீர்ப்பவள் அல்லவா!
பிரபஞ்சமே! உன்னால் மட்டும்
எப்படி எல்லாரையும் அன்பு செய்ய முடிகின்றது?
பிரபஞ்சமே! உன்னால் மட்டும்
எப்படி எல்லாரையும் நல்லவர்களாய் பார்க்க முடிகின்றது?
பிரபஞ்சமே! உன்னால் மட்டும்
எப்படி எல்லாரையும் சமமாக நினைக்க முடிகின்றது?
பிரபஞ்சமே! பிறருக்காய் வாழ்பவளே!
பிறரின் துயர் துடைப்பவளே!
பிறரை வாழ வைப்பவளே!
பிறரையும் நீயாய் நினைப்பவளே!
வாழ்க தாயே!
உன் எண்ணம் என் எண்ணமாகிட
உன் குணம் என் குணமாகிட
உன்னைப்போல் அனைத்தையும்
நல்லதாய் கண்டிட
ஆற்றல் தா தாயே!
“எல்லையில்லாமல் நீண்டு கொண்டே
செல்வது பிரபஞ்சம்
அதில் என் பங்களிப்பும்
தொடர்ந்து கொண்டே செல்லும்.”




சகோ. மரிய வெனான்சி கவிதா (1218).

---

# பிரபஞ்சக் கவிதை

பிரபஞ்சம் பற்றி கவிதை எழுதச் சொன்னார்கள். எனக்கோ கவிதை எழுதத் தெரியாதே. என்ன செய்வது என்று தெரியவில்லை. ஆண்டவரே எப்படி கவிதை எழுதுவது? என்ன எழுதுவது, என்று கேட்டேன். அவர் எனக்குக் கூறிய பிரபஞ்சக்கவிதை,

“பிரபஞ்சம் படைத்தேன் இன்பம் கண்டேன்
மானுடத்திடம் கொடுத்தேன் துன்பம் கண்டேன்.
பிரபஞ்சம் என்று இருந்ததை
பிற பஞ்சம் என்று அவன் மாற்றினான் சுயநலத்தால்
சுயநலம் மாறி பிறர் நலம் பேணினால்
பிற பஞ்சம் என்பது பிரபஞ்சப் பேரின்பமாகும்”. - இறைவன்.

சகோ. மரிய வெர்ஜின் அமலா (1136).

# என் பிரபஞ்சமே பேரன்பே!

பிரபஞ்சமே பேரன்பே, என் பிரமிப்பே
அண்டமே பேரண்டமே... என் பெரும் வியப்பே
ஓ பிரபஞ்சமே! பேரியக்கமே!
உன் உடனிருத்தலை உணர்த்தினாய்
அன்பே! பேரன்பே!
உன் இயக்க ஆற்றலை அளித்தாய்
பஞ்சபூதமே! பால்வெளியே!
நின் பக்குவப்பட்ட சக்தியைத் தந்தாய்
பெருவெளியே! பெரு வியப்பே!
மனிதர் பிழை உணர்த்தும் மாட்சி ஆனாய்
ஒலி ஒளியே! நல் ஓசையே!
நின் ஒழுங்கமைக்கும் பண்பின் உள்ளுணர்வாய் ஆனாய்.
பிரபஞ்சமே! ஓ பிரபஞ்சமே!
உன் பேரன்பில் ஒருங்கிணைந்து வழிநடக்க.......
ஆம், உன்னிடம் இருக்கும் அனைத்தையும்
அழிக்க நான் யார்?

சகோ. மெர்லின் மேரி (1371).

---

# கற்றுத் தா!



பேரன்புள்ள பிரபஞ்சமே!
பிரபஞ்சத்திலே உன் அன்பு என்னே!
என் உடல், உயிர், ஆன்மா
எல்லாம் உன்னில் ஒன்றாய் இருக்க
இது புரியாமல், உன்னை உணராமல்
நான் இருந்தேனோ!
என்னை சுற்றியுள்ள அனைத்தும்
உன்னை மையமாய் கொள்ள
உன்னை மையமாய் வைக்க நான் மறந்தேனோ!
உன்னிடம் ஆற்றல் பெற்ற நான்
உன்னோடு கைக்கோர்த்து வாழும் நாட்கள் அருகில்!
சலனமில்லாமல் வாழ கற்றுக்கொடு!
உன்னிடம் உள்ள வர்ணங்கள் எனக்கு புதிது!
உன் பரிணாம வளர்ச்சி எனக்கு புதிது!
புதிதாய் மாற கற்றுத் தா!

சகோ. அபிநயா (1364).

# அம்மா மேரி பயஸ்!



"ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர். அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள். ஏனெனில் அவர்களின் செயல்கள் அவர்களைப் பின்தொடரும். (திவெ 14:13).

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து, பண்புடைமை காத்து, பக்குவமாய் வழிநடந்து, இரக்கத்தின் இருப்பிடமாய், ஈகைபல செய்து, துன்புற்றோர் துயர் துடைத்து துணைக்கரமாய், அடைக்கலமாய் சபைப்பற்றும், சகோதரிகள் மீது பாசமும் கொண்டு வாழ்ந்த **அம்மா மேரி பயஸ்** அவர்கள் நம் சபைக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷம். அவர்கள் இழப்பு ஈடுசெய்ய இயலா ஒன்று. அன்னையை வழி அனுப்பும் முன் அவரோடு எம் வாழ்வு அனுபவங்களில் சில. உம்மை ஆண்டவன் தன் அடைக்கலத்தில் வைத்துக்கொள்ள ஆசைகொண்டு அழைத்துக் கொண்டாரோ அம்மா...

திரு. மரியதாஸ், திருமதி. மேரி ரஞ்சிதம் தம்பதியரின் பெண்களுள் முதல்வராய் மூன்றாம் மகளாய், 2 அண்ணன், 2 தம்பி, 2 தங்கையர் என்ற உறவுகளோடு 17.11.1939 அன்று தஞ்சை மறைமாவட்டம் அம்மாபேட்டையில் மலர்ந்து, லூர்துமேரியாய் வளர்ந்தவர். 08.05.1963 அன்று மேரி பயஸ் என்ற பெயரோடு எம் அடைக்கல அன்னை குடும்பத்தில் ஐக்கியமாகி, 60 ஆண்டுகள் துறவுப் பணியாற்றி 82-ஆம் அகவையில் அடைக்கல அவையிலிருந்து ஆண்டவா்மடியில் அடைக்கலம் புகுந்திட்டார்கள்.

புனித நிலை அடைய முயற்சி என்ற உயர் இலட்சியத்தோடு துறவு வாழ்வில் அடியெடுத்துவைத்த அன்னை அவர்கள் ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு வந்தபோதிலும், சபையின் நலன் கருதி திண்டுக்கல் St. Joseph's Hospital -ல் செவிலியர் பயிற்சியையும், Director of Public Nursing பயிற்சியினை கல்கத்தாவிலும், Bangalore -ரில் உள்ள Sudeep உருவாக்குநர்களுக்கான பயிற்சியினையும் தொடர்ந்து, உளவியலாளர் பயிற்சி, Yoga பயிற்சி போன்றவற்றை பாங்குடன் கற்றவர். கற்றவைகள் அனைத்தையும் கடைசி நிமிடம் வரைக்கும் பயன்படுத்தியவர். மருத்துவ ஆலோசனை,

மறைக்கல்வி, நற்செய்திப் பணி, ஆற்றுப்படுத்துதல் போன்றவற்றை கடந்த மே மாதம் வரை ஆசை ஆசையாய் ஆர்வமாய் செய்தவர்.

மயிலை மண்ணிலே ஆசிரியராக ஆரம்பித்த துறவுப்பயணம், பணிமாற்றம் பெற்று செவிலியராய் வேளாங்கண்ணி, கூடல் நகர், ராம் நகர், மௌளச்சூர், திண்டுக்கல், பூந்தமல்லி தலைமையகம், மாமண்டூர், ஆழ்வார்பேட்டை என்று பரந்துபட்டு இறுதியாக பல்லாவரம் குழுமத்தில் அன்னையின் துறவு பயணம் நிறைவு பெற்றது.

அம்மா அவர்கள் துறவுப் பயணத்தில் சென்ற திசைகளில், கொடுத்த பணிகளைச் செம்மையாய் செய்தவர். சிறப்பாக புகுமுகத் துறவியரின் உருவாக்குநர் பணியினை மிக நிறைவாகச் செய்தார்கள். புகுமுகத் துறவியரோடு ஒன்றாய் வாழ்ந்தார்கள். அவர்களோடு ஒருவராய் இருந்தார்கள். உண்ணும் போதும் உறங்கும் போதும் மட்டுமல்ல ஒன்றாக நன்றாக அவர்களோடு விளையாடுவதில் விருப்பமுடையவராய்த் திகழ்ந்தார்.

அவர்கள் உடையிலே நேர்த்தியைப் புகுத்தினார். உடற்பயிற்சியிலே ஆர்வத்தை ஊட்டினார். நேர்மறை எண்ணத்தை வளர்த்தார். இயற்கையை நேசிக்கச் சொல்லித் தந்தார். அமைதியை வளர்ப்பதில் ஆசை கொண்டார். இப்படியாக புகுமுகத் துறவியருக்கு பலவற்றைக் கற்றுக்கொடுத்தீர்கள். கடவுளையே சிக்கென பற்றவைத்தீர்கள். செபமே அடித்தளம் என்பதை ஆழப்பதியவைத்தீர்கள். இதோ உம்மால் உயர்ந்தவர்கள் உளம் உருகி நிற்கின்றனர் தெரியுதா அம்மா?

ஈராராண்டுகள் ஆலோசகர் பணிக்காலம் - அதில் அடுத்தடுத்து நடந்தது அடைக்கலச் செல்வங்களின் திருமணம். அயராது சென்றீர் மாப்பிள்ளை வீட்டிற்கு, தகுதி அறிந்தீர், விருப்பம் தெரிந்தீர் பின்னரே இசைவு கொடுத்தீர்.

அடைக்கலச் செல்வங்கள் பலரை பிஞ்சிலே கையிலே வாங்கினீர். நெஞ்சிலே தாங்கினீர். திருமணமும் முடித்து வைத்தீர். இடையிடையே ஏற்பட்ட சிற்சில சிக்கல்களையும் தீர்த்துவைத்தீர். அடைக்கலச் செல்வங்கள் படித்த கல்லூரி சென்றீர். கற்றல் நிலையைக் கேட்டறிந்தீர். தங்கியிருந்த விடுதி சென்றீர். உணவு, சிற்றுண்டி என கையிலே தூக்கிச் சென்றீர். தாய் முகம் காணா சேய்களுக்கு உம் முகமும் குணமும் பிடித்திருந்தது. அதுதான் இன்று உம்மை உயர்ந்த இடத்தில் நிறுத்தியுள்ளது.

இலக்கியம் போற்றும் செவிலித்தாய் போல் நீர் செய்த சேவையை எண்ணி கனத்த இதயத்துடன் உம் காலடி நிற்கும் செல்வங்களைக் கண்திறந்து பாருமம்மா. அடைக்கலச் செல்வங்களுக்கு நீர் செய்த சேவை இன்றே உமக்குப் பெற்றுத்தரும் விண்ணக வாழ்வை. இறுதியாய் எம்மோடு பல்லாவரத்தில் நீர் வாழ்ந்த நாட்களை அசைபோடுகிறோம் அம்மா...

பார்த்தவுடன் ஓர் புன்னகை
பார்க்காவிடில் காணவில்லையே என்ற விசாரணை.

உடல் நலமில்லை என்றால் தருவீர் நல் ஆலோசனை.
உம்மைக் காண வருவோருக்கு கொடுப்பீர் நல் உபசரணை
நாங்கள் சிரித்தால் சிரித்தீர்கள்.
நாங்கள் பேசினால் செவிமடுத்தீர்கள்.
இருக்கும் இடம் தெரியாமல் வாழ்ந்தீர்கள்.
மௌன புன்னகையால் எம்மனம் கவர்ந்தீர்கள்.

ஆடையில் மட்டுமல்ல உள்ளத்திலும் வெள்ளை மனம் கொண்டவரே. நீங்கள் நடந்த இடம் அமர்ந்த இடம் என உம்மைத் தேடும் எம் கண்கள் உம்மைக் காணாது தவிக்கிறது. எங்கும் நிறைந்திருந்த நீர் இன்று எம்மோடு இல்லாமல் ஏன் சென்றீர்கள் அம்மா...

பல்லாவரம் குழுமத்தில் அழைப்பு மணி ஒலித்தால் யாரென்று பாராமலே உம்மை அழைப்போம். காலை, மதியம், மாலை என உம்மைக்காண வருவோர் பல்லாயிரம். இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் என எம்மதத்தவருக்கும் சிறுவர், இளையோர், பெரியோர் என எப்பருவத்தினருக்கும், ஏற்றவராய்த் திகழ்ந்தீர். பல்லாவரம் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்திலே இளையோர் ஞானஸ்தானம், பிரிந்த குடும்பங்களைச் சேர்த்து வைத்தல், முறையற்ற திருமணங்களை முறைப்படுத்துதல் என மறைபணியினை விருப்போடு செய்த இன்றைய மறைத்தூதர் அம்மா நீர்.

புனிதாவின் மகனை ஊட்டி வளர்த்தீர். இல்லிடமும் அமைத்துக் கொடுத்தீர். இனிப்புகளை அவளுக்குத் தருவதில்தான் எத்தனை இன்பம் உம்முகத்தில். துறவுப் பயணத்தின் துவக்கத்தில் செய்த ஆசிரியர் பணியைப்போல், முதல் திருவிருந்து உறுதிப்பூசுதல், திருமண தயாரிப்பு என்று மீண்டும் ஆசிரியர் பணியினைச் செய்து மனநிறைவோடு விடைபெற்றீரோ அம்மா!

அதிக நேரம் ஆலயத்தில் அமர்ந்திருந்தது, போதாதென்று ஆண்டவன் அடிதனில் அமர்ந்திட சென்றாயோ அம்மா! எல்லோருக்கும் எல்லாமுமானீர். எதார்த்தமாய் பேசுவீர். நீர் நலமாய் இருந்தவரை, நிறுத்தியதில்லை உம் நடைப்பயிற்சியினை. நடந்து நடந்து ஓய்ந்த உம் கால்களுக்கு ஓய்வு கொடுக்கத் தேவனிடம் ஓடிச்சென்றாயோ அம்மா!

பழமரம் நாடும் பறவைபோல் தினம் உமைத்தேடி பலர் வருவர் சளைக்காமல் அவர்களை சந்திப்பீர். சத்திய தேவனைப் பற்றி அவர்களுக்கு எடுத்துரைப்பீர். பல்லாவரத்து இன்றைய பவுல் நீர் என்றால் அது மிகையல்ல. நீர் விரும்பும் பல்லாவரத்திலிருந்து சென்ற வாரம் உம்மை வந்து பார்த்தோம். கண்திறந்து எம்மை பார்த்தீர். மென்மையாய் சிரித்தீர், மெல்ல பேசினீர். மீண்டும் வருவேன் என்றீர். வார்த்தை மறந்தது ஏனம்மா?

அம்மா உம்மோடு உடன்வாழ்ந்த நாட்களில் எழாத கேள்வி ஒன்று, உம் வாழ்க்கையைபற்றி எழுதும்போது எழுந்தது. மேரி பயஸ் என்ற பெயரை எப்படி ஏன் தேர்ந்தெடுத்தீர்கள் என்று தெரியவில்லை. ஆனால் பெயருக்கேற்ற பொருத்தமான வாழ்வு வாழ்ந்த உம்மை நினைத்துப் பெருமைப்படுகின்றோம். உடன் பிறந்தோர் எழுவராயினும் அவர்களுள் ஒருவர்மீது உமக்கு அதீத பாசம் உண்டு. ஆம். மேதகு ஆயர் அவர்களை நேசிப்பதும் அவர்களுக்காய் செபிப்பதும் உமக்கு உவகைத்தருவதாய் இருந்தது. ஆயர் அவர்களின் பிறந்த நாள், குருத்துவ நாள், ஆயராக திருநிலைபடுத்தப்பட்ட நாள். என ஒவ்வொரு நாளினையும் மறவாமல் நினைவு கூர்ந்து, முதல் நாளே குழுமத்தில் கூறி செபிக்கக் கேட்டுக்கொள்வீரே. ஆயர் அவர்களின் குருத்துவ வாழ்விற்கு அடித்தளமிட்ட நீங்கள் அண்ணாரின் வெள்ளிவிழா ஆண்டில் யாரும் கொடுக்க இயலாத பரிசாக இறையாசீரை இறைவனிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொடுக்க விருப்பம் கொண்டுதான் விண்ணகம் விரைந்தீர்களோ!.

மனிதப் பிறவியாய் பூமியில் பிறப்பது அழகானது அதனைச் சிறப்பூட்டும் விதமாய் வாழ்ந்து காட்டுவது இன்னும் சிறப்பானது. நல்ல மனிதராய், துறவியாய், கிறிஸ்தவராய் வாழ்ந்த உம்மோடு யாமும் வாழ்ந்தோம் என்பதை எண்ணிப்பார்க்கிறோம். எல்லாவற்றிலும் முன்மாதிரியாய், ஒழுங்குகளை அனுசரிப்பதில் விருப்பமுடையவராய் வாழ்ந்த உம் வாழ்க்கைத் தடத்தை, வழித்தடத்தை வார்த்தையால் சொல்ல இயலாது. முதுமையிலும் இளமையோடு முல்லைச் சிரிப்போடு எம்மோடு நீர் உலா வந்த தருணங்களை மறக்க இயலாமல் தவிக்கின்றோம்.

கண்முன்னே நீர் வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும், எம்முன்னே உம்முகம் எந்நாளும் உயிர்வாழும். மண்விட்டு பிரிந்து விண்ணோக்கிச் சென்றாலும், எம் மனம்விட்டுப் பிரியாமல் இருப்பீர் அம்மா!

மண்ணகத்தில் முப்பொழுதும் பிற உயிர்களுக்காக செபித்த நீர் விண்ணகத்திலும் எமக்காக பரிந்து பேசுவீர் என்ற நம்மிக்கையோடு கண்ணீரோடு விடை தருகின்றோம். உங்கள் ஆன்மா இறையின் பாதத்தில் சங்கமிக்க இதோ இந்தக் கல்வாரிப் பலியில் இணைந்து செபிக்கின்றோம். நிறைவான இறைவன் உம் குறைகளைக் களைந்து வான்வீட்டில் இடம் தர இணைந்து செபிக்கின்றோம் அம்மா!

**கண்ணீருடன்...**

**பல்லாவரம் குழுமச் சகோதரிகள்**

# அமைதியாகப் பறந்து சென்றது ராஜரீகம் என்னும் அமைதிப்புறா!

நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் (2திமோ. 2:7).



புன்னகை பூவொன்று பூக்காமல் உதிர்ந்தது! சில்லறை சிதறும் சிரிப்பழகி சிலையாய் தூங்குகிறார்! அதிராத பேச்சினால் அத்தனை உள்ளங்களிலும் நிறைந்தவர், அமைதியாய் உறங்குகிறார் ஆண்டவரின் பூமடியில்! காலனவன் தன் கணக்கை சாலவே செய்ய மண்விட்டு வானம் சென்றீரோ! வானம் சென்ற உம்மை நினைத்து கண்ணீர்விட்டு கரைகிறோம். ஆற்றுவாரில்லை. ஆறுதல் சொல்ல வார்த்தைகளில்லை! பிறருக்காய் துடித்த இதயம் இன்று இறைக்காய் நின்றது! நம்ப மறுக்கிறது கண்கள்! ஏற்க மறுக்கிறது இதயம் உம் இதய அலைவரிசையின் துண்டிப்பை!

எவரையும், எதையும் குறைசொல்லாத சுத்த நாவு கொண்ட நீவிர் தென்பாண்டி சீமையிலே, தூய அருளானந்தரின் குருதியில் சிவந்த ராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள ஆண்டாவூரணி குஞ்சங்குளத்திலே திரு. சந்தியாகு, திருமதி. பாக்கியம் என்ற பண்பாளர்களுக்கு 08.12.1954-ல் ஆறாவது மகளானீர். அமலோற்பவம், அருள்சாமி, ஆரோக்கிய சாமி, மிக்கேலம்மாள், குழந்தை தெரஸ் (Late), வின்சென்ட், காணிக்கை அன்னை சபைக்கு தன்னை அர்ப்பணித்த அருட்சகோதரி லூர்துமேரி என்னும் ஏழு உடன்பிறப்புகளுக்கு உயிரானீர்.

பிறப்புகள் உம் உதிப்பிலே மகிழ, அடைக்கல அன்னை சபை உம் வரவிலே பேரின்பம் காண 1971-ல் தேர்வு நிலையிலும், 1972-ல் புகுமுகத்துறவு நிலையிலும் தடம் பதித்தீர். உம் பக்தியையும், சிந்தனைத் தெளிவையும், சேவையில் ஆர்வத்தையும் எம்

தாய் அடைக்கல அன்னை உம்மை 1974-ல் முதன்முறையாய் அரவணைத்தார்! பின் 1980ல் நிரந்தராமாய் உம்மை தன் மகளாய் அணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தாள்.

பூந்தமல்லி, மன்னார்குடி, நடுவட்டம், ஆழ்வார்பேட்டை, காஞ்சிபுரம், மிக்கேல்பட்டி, முத்துப்பேட்டை, கோவளம், சிறுத்தனூர், லெகோதெ இல்லம், ஆழ்வார்பேட்டை நாசரேத் ஆகிய இல்லங்கள் உம் புனித பாதத்தால் புனிதமடைந்தன. உம் சீரிய பணிகளால் வளமையடைந்தன. உம் பாசத்தால் பூத்துக்குலுங்கின.

ஒளி நிலவாய் ஒளிதந்து ஆசிரியப் பணியால், அதிலும் தலைமை ஆசிரியராக 25 ஆண்டுகளுக்கு மேல் பல இதய அறைகளில் அறிவு என்னும் விளக்கினை ஏற்றிவைத்தீர்! அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து, பண்புடைமை காத்து பக்குவமாய் வழிநடந்தீர், இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர். எல்லா விசயத்திலும் நேர்மையைக் கைகொண்டீர். எவரையும் குறை சொல்லாது, எதிலும் குறை காணாது, எதையும் எதிர்பார்க்காது எதார்த்தமாய் பணி செய்தீர். ஆடம்பரமின்றி அமர்க்களமின்றி அமைதியாய் வாழ்ந்து பலர் போற்ற சேவை புரிந்து இன்று அமைதியாய் துயில் கொள்கிறீர். எதற்கும் நீர் ஆசைப்பட்டதில்லை ஆண்டவனைத் தவிர! உடல் நலக்குறைவிலும நீர் எடுத்ததில்லையே ஓய்வு! இன்றைய நாளில் எப்படி நீ நிரந்தரமாய் ஓய்வெடுத்தாய்! பிறர் துன்பம் தன் துன்பம் போல் எண்ணினான் இன்று எம்மை துன்பக்கடலில் தவிக்கவிட்டு சென்றுவிட்டாய்! கடனாகப் பெற்றிருந்த கடவுளின் இதயத்தைத் திருப்பித் தருவதற்காய் சென்றாலும் எங்கள் இதயமது வெடிக்கிது. எமனவனை எரித்திட மனதும் துடிக்கிறது!

ஏனோ இறைவன் உம்மை 68 வது வயதில் வாஞ்சையோடு அழைத்துக்கொண்டார். துன்புற்றார் துயர் துடைத்து துணைக்கரமாய் அடைக்கலம் தந்த உம்மை ஆண்டவன் ஏன் அழைத்தான் விரைவிலே!. பலருக்கும் ஆலமரமாய் நிழல் தந்தாயே அன்று! அடிபட்ட மரமாய் சாய்ந்தாயே இன்று! உற்றார் உறவினர்கள் கதறியழ! காணும் எம் விழிகளோ வழிகிறது!. சட்டென்று நீ பறந்து சென்றதால் பட்ட மரமானது எம் மனம்! எதையும் தாங்கிய இதயம் அல்லவா உமக்கு! வீறுகொண்டு எதையும் சாதிக்கும் சரித்திர மங்கை அல்லவா நீர்! காத்திருக்கிறார்கள் உம்மோடு வார்த்தைப்பாடு கொடுத்த உம் சகோதரிகளும், உம் உடன் நடந்த உம் தோழிகளும் உன்னைச் சுற்றி! காலம் தாழ்ந்து நீ எழுவாய் என்று!

உன்னால் வளர்ந்தவர் ஆயிரமாயிரம்! உன்னை விரும்பியவர் பல்லாயிரம்! பாசமுள்ளவர்களை விலகிச் சென்றிட எண்ணம் ஏன் வந்தது உமக்கு? வார்த்தை தடுமாறுகின்றதே! நேற்றுக் கண்ட உன்னை நினைத்து நெஞ்சம் உருமாறுகின்றதே! செபம் திருப்பலி முடித்துவிட்டு நன்றாக பேசிவிட்டு சென்ற உம் பூமுகம் எங்கள் மனதிலிருந்து மறைவதற்குள் நீர் மறைந்துபோனது ஏனொ?

நேற்றிரவு பத்தரை மணி வரை சகோதரிகளோடு உறவாடி இன்று ஆழ்ந்த நித்திரையில் நீர்! துக்கத்தால் நித்திரையின்றி நாங்கள். “யாரையும் என் வாழ்க்கையில் கஷ்டப்படுத்தக்கூடாது” என்ற விருதுவாக்கை எடுத்ததாலோ என்னவோ பிறரை

கஷ்டப்படுத்தாமல் வாழ்ந்தீர். பிறரை கஷ்டப்படுத்தாமல் இறந்தீர். பூத்த உந்தன் கொடிகள் தவிக்குதம்மா! உம் பாதத்தில் நனைந்த எங்கள் இதயம் வெடிக்குதம்மா! பூக்காதோ மீண்டும் உன் வாழ்வு என்று சபையே கலங்கி நிற்குதம்மா! இன்சொல் பேசும் உன் இனிய வார்த்தைகளை மறக்காது எங்கள் மனது என்றும். துறவு வாழ்வில் வாழ்ந்தீர் 48 ஆண்டுகள் தூய வாழ்வு வாழ்ந்தீர் அத்தனை ஆண்டுகளும். உடல் நோயினால் ஏற்பட்ட துன்பங்கள் துச்சமானது உமக்கு! ஆண்டவரின் அன்பை நீர் பெரிதென நினைத்ததனால்!

அன்பு செலுத்துவதிலும், நேசிப்பதிலும், கரிசனையிலும், பொறுப்பிலும், பொறுமையிலும் நீர் பணக்காரி என்றாலும் இரண்டு டவளையும், உடையையும் மட்டுமே உனக்கு சொந்தமாக்கி எளிமையை உம் உடைமையாக்கினாயே! மன்னிப்பதில் முந்தி, தண்டிப்பதில் பிந்திக் கொள்வீரே! எதையும் மனதில் வைக்காமல் மாண்போடு பழகுவீரே! எதிலும் நீர் நிதானம் இழந்ததில்லை உம் முடிவிலும் தடம்புரண்டதில்லை! செபத்தில் மூழ்கி வெற்றியென்னும் முத்தெடுத்தாய் ! இன்று மூச்சடக்கி எம் பேச்சடங்க செய்துவிட்டாய்! துடிப்பாய் பணிசெய்த நீர் மீண்டும் துள்ளி எழுந்து, துடிக்க மறந்திட்ட எம் இதயத்தை துடிக்க வைத்துவிடு! விழித்திரையை மறைக்கின்ற கண்ணீர் திரையை விளக்கிடவே விரைந்திங்கு வந்துவிடு! என்று எம் மனது ஏங்கினாலும் விண்ணவனின் கட்டளைக்குப் பணிந்து, மரணிக்கையியலா உம் நினைவுகளோடு கண்ணீர் பூக்களை தூவிக்கொண்டு வழியனுப்பிவைக்கிறோம் வான்வீட்டிற்கு சபைக்காய் பரிந்துரைக்க!

---

# பிறந்தாய்! பிறந்தாய்!

பிறந்தாய்! பிறந்தாய்! எனக்காக
உன் பிறப்பே! என் வாழ்வுக்காக
தாகத்தின் தண்ணீர் நீ!
வெப்பத்தின் மழையும் நீ!
சோகத்தின் தென்றல் நீ!
மகிழ்ச்சியின் பசுமை நீ!
நோயின் மருந்து நீ!
பசியின் உணவு நீ!
இருளின் ஒளி நீ!
வறுமையின் செல்வம் நீ!
வாழ்வும் நீ! வளமும் நீ!
எல்லாமும் நீ ஆனாய் பரம்பொருளே!
எனக்காய் பிறந்து
எனக்காய் வளர்ந்து
எனக்காய் மடிந்த
உன் பேரன்பைப் போற்றி
தலை வணங்கி நிற்கிறேன்.

சகோ. ஜீலியட் டாரத்தி (1440).

# நீ என் கண்களுக்கு விலையேறப்பெற்றவள்!



'மக்கா' என்று அனைவரையும் பாசத்தோடு அழைக்கும் சகோதரி மரிய ராஜம் அவர்களே! உமக்கு பிரியாவிடை கொடுக்க கணத்த இதயத்தோடு கூடி இருக்கிறோம். நீர் இறந்து விட்டதை நினைக்கக் கூட மனது மறுக்கிறது. வாழ்வு இவ்வளவு தானா என்று தோன்றுகிறது. கலகலப்பான சகோதரியே! உமக்கு எம் கண்ணீர் அஞ்சலி.

**சகோதரி. மரிய ராஜம்** அவர்கள் 1951 -ஆம் ஆண்டு திருவாளர் மரிய சவரிமுத்து, அந்தோணியம்மாள் இவர்களுக்கு ஏழு செல்வங்களுள் ஆறாவது செல்வமாய் கன்னியாகுமரி மாவட்டத்தில் குமார பெருமாள் விளை என்ற ஊரில் பிறந்தவர். அடைக்கல அன்னை சபையில் 1974 -ஆம் ஆண்டு முதல் வார்த்தைப்பாடு கொடுத்தவர். 1980 -ஆம் ஆண்டு நிரந்தர வார்த்தைப்பாடு கொடுத்தவர். இறைவனின் துணையோடு துறவு வாழ்வில் 48 ஆண்டுகள் வாழ்ந்தவர்.

**"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்"** என்ற இறைவார்த்தைக்கேற்ப போரூர், திண்டுக்கல் மேட்டுப்பட்டி, இருதயபுரம், திருவாரூர், மயிலாப்பூர், பாதரக்குடி, நடுவட்டம், அரக்கோணம், பூந்தமல்லி, விச்சூர், கருங்கண்ணி, சிந்தாதிரிப்பேட்டை, நடுத்தெரு, பல்லாவரம், பெங்களூர், லெகோதே இல்லம், கோவளம், சத்தியவேடு போன்ற இடங்களில் தலைமை ஆசிரியராக, இல்லத்தலைமைச் சகோதரியாக, இல்ல சகோதரியாக சிறப்பாகப் பணியாற்றியவர்.

எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பவர். குழுமத்தில் உள்ளவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பவர். கடின உழைப்பாளி. எந்தப்பணியையும் சிறப்பாகச் செய்பவர். தன்னையும் ஆன்மாவையும் அழகாக வைத்திருப்பவர். சகோதரிகளை

'பாசத்தோடு மக்கா' என்று அழைப்பவர். பணியாளர்களைத் தம்பி தங்கை என்று உறவு சொல்லி அழைப்பவர். இயற்கையை அதிகமாக நேசிப்பவர். நகைச்சுவையாகப் பேசுபவர். உயிரினங்கள் மீது அலாதி பாசம் கொண்டவர். உயிரினங்களையும் உறவு சொல்லி அழைப்பவர். எல்லோரையும் மதிப்பவர், மூத்த சகோதரி முதல் இளைய சகோதரி வரை அனைவரையும் மரியாதையுடன் அழைப்பவர். குழுமத்தில் உள்ளவர்கள் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று நினைப்பவர்.

வாழ்க்கையில் யாருக்கும் தொந்தரவு கொடுக்கக் கூடாது என நினைப்பவர். எதையும் மனதில் வைத்துக் கொள்ள மாட்டார். எப்போதும் கனமாகாத இவரின் இதயம் எப்படி நின்றது? நினைக்க முடியவில்லை. மக்கா! உம் இறப்பு எல்லோருக்குமே அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருக்கின்றது. கடைசியாக நீர் உச்சரித்த வார்த்தை இயேசப்பா! என்னை காப்பாத்து. முதலும் முடிவும் அவரே என்று சரணடைந்தாயோ?.

கடைசியாக நீர் வசித்த சத்தியவேட்டில் உள்ள செடி கொடிகள் எல்லாம் உன்னைப் பார்க்க, உன் பேச்சைக் கேட்க ஏங்குகிறது. உம் இழப்பு அடைக்கல அன்னை சபைக்கு பேரிழப்பாக இருக்கிறது. அன்பு சகோதரியே! உம்மிடம் விளங்கிய இறைப்பற்று, கடின உழைப்பு, இயற்கையின் மீது பாசம் போன்ற நற்பண்புகளில் நாளும் நாங்களும் வாழ வேண்டிக்கொள்ளுங்கள்.

---

# பிரபஞ்சம்!



என்னை சுவாசிக்க வைக்கிறவர்களுக்கு
நான் வாசித்த முதல் கவிதை
"பிரபஞ்சம்"
இக்கணமே நான் உன் தஞ்சம்
இனி நீ வேறு நான் வேறு
என்று சொல்லுமோ என் நெஞ்சம்!

பஞ்சமில்லா நெஞ்சம் கொண்ட
சகோ. சகாயமேரி (1222),
தஞ்சை மாநில இல்லம்.

# இறந்தவர்களுக்காகச் செபிப்போம்

| வ. எண் | சபை எண் | சகோதரியின் பெயர் | உறவு முறை | இறந்தவரின் பெயர் | தேதி |
|---|---|---|---|---|---|
| 01 | 1167 | சகோ. ஜெய ராக்கினி | அப்பா | திரு. அடைக்கல சாமி | 02.05.2022 |
| 02 | 0607 | அன்னை லூர்து மேரி | அண்ணன் | திரு. ஆரோக்கிய சாமி | 05.06.2022 |
| 03 | 1115 | சகோ. ஜான் சகாய இன்பெண்டா | அம்மா | திருமதி செல்வ மரியம்மாள் | 07.05.2022 |
| 04 | 1180 | சகோ. அமுல் செல்வி | அப்பா | திரு. அருளாந்து | 10.06.2022 |
| 05 | 0794 | சகோ. மேரி இசபெல்லா | அக்கா | திருமதி ஒளி பார்ஜியா | 08.05.2022 |
| | | | அம்மா | திருமதி வியாகுல மேரி | 20.06.2022 |
| 06 | 1237 | சகோ. அருள் செல்சியா | அத்தை | திருமதி. ஸ்டெல்லா | 07.07.2022 |
| 07 | 0926 | சகோ. சந்தோஷமேரி | சித்தி | திருமதி. மரியம்மாள் | 07.07.2022 |
| 08 | 0664 | சகோ. ஜேஸி சந்திரா மேரி | அம்மா | திருமதி தெரஸ் | 22.07.2022 |
| 09 | 1344 | சகோ. விமல்ராணி | அப்பா | திரு. சிமியோன்ராஜ் | 05.08.2022 |
| 10 | 0973 | சகோ. சகாயராணி | அண்ணி | திருமதி. அலோசியஸ் | 13.08.2022 |
| 11 | 1278 | சகோ. அனுசியா | அப்பா | திரு. ஜோசப் தியாகராஜன் | 16.08.2022 |
| 12 | 0985 | சகோ. ஜோஸ்பின் மகதலேன் | அப்பா | திரு. பாலசாமி | 17.08.2022 |
| 13 | 1192 | சகோ. பாத்திமா மேரி | அம்மா | திருமதி மேரி | 20.08.2022 |

# இறந்தவர்களுக்காகச் செபிப்போம்

| வ. எண் | சபை எண் | சகோதரியின் பெயர் | உறவு முறை | இறந்தவரின் பெயர் | தேதி |
|---|---|---|---|---|---|
| 14 | 0593 | சகோ. மரிய பாத்திமா | அக்கா மகன் | திரு. அருள் | 25.08.2022 |
| 15 | 0892 | சகோ. ஜோஸ்பின் ராணி | தங்கை மகன் | திரு. ஜேம்ஸ் | 31.08.2022 |
| 16 | 0847 | சகோ. குழந்தை தெரஸ் | அண்ணன் | திரு. சந்தியாகு | 09.09.2022 |
| | 0763 | சகோ. குழந்தை தெரஸ் | தங்கையின் கணவர் | | |
| 17 | 1304 | சகோ. ஞான ஆரோக்கிய செல்வி | மாமா | திரு. ஜேம்ஸ் ஆரோக்கியம் | 11.09.2022 |
| 18 | 0526 | சகோ. மேரி புரத்தாஸ் | அண்ணி | திருமதி அமலோற்பவம் | 14.09.2022 |
| 19 | 1192 | சகோ. பாத்திமா மேரி | அம்மா | திருமதி பாத்திமா மேரி | 20.09.2022 |
| 20 | 0997 | சகோ. அருள் அனித்தா | அம்மா | திருமதி செபமாலை மேரி | 21.09.2022 |
| 21 | 0602 | சகோ. லீமா ரோஸ் ஜெயசீலி | தங்கை | திருமதி ஜெசிந்தா | 24.09.2022 |
| | 1049 | சகோ. அமலி ஜெய கீதா. | சித்தி | | |
| 22 | 0878 | சகோ. ஜான்சி ராணி (சவரியம்மாள்) | தங்கை | திருமதி நம்பிக்கை மேரி | 28.09.2022 |
| 23 | 0616 | சகோ. பவுலின் ஆக்னெஸ் தெரஸ் மேரி | அண்ணன் | திரு. மார்ட்டின் ஆன்டனி அமல்ராஜ் | 18.09.2022 |
| | 0808 | சகோ. கிளாரா சகாய மேரி | | | |
| 24 | 0679 | சகோ. சந்திரா | தங்கை கணவர் | திரு. டேவிட் தொனாத்தூஸ் | 18.09.2022 |
| 25 | 0646 | சகோ. ஸ்டெல்லா ரூபி | அம்மா | திருமதி மரிய செல்வம் | 24.05.2022 |



## Meeting the Major Superiors of Different Congregations















## சபைத் தலைமை அன்னையின் ஐரோப்பிய பயணம்







